விலை: 20/=

நமது

செய்வது துணிந்து செய் சொல்வது தெளிந்து சொல்

முரசொலி

நமது முரசொலி Namathu Murasoly

வார இதழ்

முரசு - 01 (22.11.2013 - 28.11.2013) திருவள்ளுவர் ஆண்டு: 2044 முழக்கம் - 13

சிந்திக்க வைக்கும் சனல் 4

இவர்களால் என்ன செய்ய முடியும்?

PUBLIC LIBRARY JAFFNA

உள்ளே **வெற்றி முரசு**

இலவச இணைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்திக்க வைக்கும் சனல் 4

இன்று "சனல்4" மற்றும் கொலைக்களம் ஆவணப்பட இயக்குனர் "கலும் மக்ரே" இந்த பெயர்களை அறியாதவர்கள் என்று யாரும் இல்லை எனக் கூறலாம். இலங்கையில் கடந்த 30 வருடகாலமாக நடைபெற்ற உள்நாட்டுப்போர் கடந்த 2009 இல் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட வேளை, உலகையே உலுக்கிய இறுதி யுத்தப் போர்க்குற்றங்கள் தொடர்பில் ஏற்கனவே நாம் இணையத்தளங்களில் பார்த்த காட்சிகளால் மன அழுத்தத்திற்கு உள்ளாகியிருந்தவேளை அவை வெறுமனே தமிழர் சமூகத்திற்கு மட்டுமே மன உளைச்சலை ஏற்படுத்தியிருந்தது.ஆனால் அது சர்வதேச ஊடகமான "சனல் 4 " வின் கழுகுப்பார்வையில் சிக்கிய போது நிலமை வேறாகியது. ஆரம்பத்தில் கிடைத்த காட்சிகளுடன் அவர்களிடம் அவர்களது இரகசிய தொடர்பாடல்களினால் பெறப்பட்டு இடையிடையே வெளியிடப்பட்டு, பின்னர் "கொலைக்களம்" என்ற பெயரில் ஆவணப்படமாக வெளிவந்தவேளை உலகம் தன்னையறியாமல் கண்களில் கண்ணீர் உதிர்த்தது. அதன் மூலம் அந்த ஆவணப் படத்தினை இயக்கிய "கலும் மக்ரே" பிரபல்யமாகினார். அதன் பின் சனல் 4 என்றாலே இலங்கையரசுக்கு சிம்ம சொப்பனமாக இருந்துவருகின்றது.

அவர்களது ஆவணப்படம் போலியானது, புலிகளிடம் பணம் பெற்று தயாரிக்கப்பட்டது என்று எப்போதும் கூறிவரும் இலங்கையரசின் வாதங்களை சர்வதேசம் ஏற்றுக் கொள் ளத் தயாராகவே இல்லை. அதேபோல தமிழ் மக்க ளும் தயாரில்லை. எந்த ஒரு சாதாரண நபராலும் இலகுவில் உண்மையா பொய்யா என உணர்ந்து கொள்ளக்கூடிய காணொளி ஆதாரங்களும், நிழற்பட ஆதாரங்களும் இறுதி யுத்தத்தில் சர்வதேச போர் நியதிகள் மீறப்பட்டுள்ளன என்பதைப் பட்டவர்த்தனமாக தெரியப்படுத்தியுள்ளன. பொதுமக்கள் மீதான கண்மூடித்தனமான தாக்குதல்கள், யுத்த சூன்ய வலயம் என அறிவிக்கப்பட்ட பின்னர் அதற்குள் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் மற்றும் சரணடைந்தவர்கள் மீதான கொலைவெறித் தாக்குதல்கள், தப்பியோடிய பொதுமக்கள் மீதான கூட்டுச்சம்பவங்கள், இரசாயன குண்டுப் பாவனை, மக்கள் பணயமாக தடுத்து வைக்கப்பட்ட சம்பவங்கள், காணாமல் போன சம்பவங்கள், முறையற்ற புனர்வாழ்வுகள் என போர்விதிமீறல்களின் பட்டியல் நீண்டு செல்கிறது. ஆனால் இவை பற்றி அவ்வப்போது காணொளிகள் வெளியிடப்படும் போதும், ஐக்கிய நாடுகளின் மனித உரிமை மாநாடுகள் நடைபெறும் காலப்பகுதியிலும் மட்டுமே பெரிதாகப் பேசப்படும். அதன்பின்னர் நாட்கள் செல்லச்செல்ல மக்கள் தமது அன்றாட நடவடிக்கைகளில் இறங்கி விடுவார்கள்.

எனவே இந்த போர்க் குற்றங்களுக்கு எதிரான செயற்பாடுகள் ஒரு பருவகால செயற்பாடாகவே இதுவரை இருந்து வந்திருக்கின்றது.அவ்வப்போது பல அரசியல் தேவைகளுக்காக உள்ளூர் மற்றும் அயல்நாட்டு அரசியல்வாதிகளினால் கையில் எடுத்துக் கொள்ளப்பட்டும் வருகின்றது. ஆனால் இவை தொடர்பில் விடுதலைப் புலிகளை ஒழிக்க வேண்டும் என்று கங்கணம்கட்டி இறுதி யுத்தத்தில் இலங்கைக்கு உதவிய சர்வதேச சமூகம் இதுவரை உருப்படியான எந்தவொரு நடவடிக்கையினையும் எடுக்கவில்லை. சர்வதேச நீதிமன்றில் எந்தவொரு வழக்கும் இதுவரை தாக்கல் செய்யப்படவும் இல்லை.

இலங்கையரசோ எதற்கும் சளைப்பதாகத் தெரியவில்லை. இறுதி யுத்தத்தில் களமாடிய சவேந்திர சில்வாவினை ஐக்கிய நாடுகள் சபையின் மனிதஉரிமைகள் விவகாரத்தின் தொடர்பாளராக நியமித்தது வரை தனது பிடியில் தளராது இருக்கிறது. எவ்வளவு திட்டினாலும், பேசினாலும் அது அசைவதில்லை. மக்களின் மீட்பு நடவடிக்கை என்று தானே ஒரு ஆவணப் படத்தினையும் வெளியிட்டு, பயங்கரவாதத்தினை எப்படி முறியடித்தோம் என புத்தகம் வெளியிட்டு, அது தொடர்பில் சர்வதேச இராணுவங்களுக்கு விளக்கமளிக்கும் மாநாட்டினையும் நடாத்தி, வெற்றிவிழாக்களையும் கொண்டாடி வருகின்றது. அரசு ஒரு இம்மியளவிலேனும் இறுதி யுத்த போர்க்குற்றத்தினை பொறுப்பேற்கத் தயாராக இல்லாத நிலையிலேயே உள்ளது. என்ன ஆதாரம் வந்தாலும் அது பொய் என்று அவசரமாக பதிலளிப்பதோடு அவர்களது பணி நின்றுவிடுகிறது. பொறுப்புகூறலை அது ஒருபோதும் செய்யத் தயாராகவில்லை அதேவேளை தான் செய்தவைகள் யாவும் சரி என்று தனது வாதத்தை முன்வைத்து வருகின்றது.

வடமாகாணத்தேர்தலை தொடர்ந்து இதுவரை காலமும் காணொளிகள் விடயத்தில் அரசு சார்பாக இருந்து அடக்கி வாசித்த அல்லது மௌனம் சாதித்த ஈழமக்கள் ஜனநாயக கட்சி கூட கண்டனம் தெரிவித்திருக்கிறது. விசாரணை அவசியம் என வலியுறுத்தியுள்ளது. அந்தளவுக்கு அவர்களையும் இது உலுக்கிவிட்டதா அல்லது இது தான் இனி தமிழ்மக்களை கவரும் அரசியல் வழி என்று கருதியதோ தெரியவில்லை. கூட்டமைப்பு நிறைந்த மௌனத்தின்பின் பலரின் வேண்டுகோளின் பேரில் வாய்திறந்தது. அது வெறுமனே உள்ளக விசாரணை வேண்டும் என்பதோடு அடங்கி விட, விமர்சகர்கள் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சர்வதேச விசாரணை வேண்டும் என குறிப்பிட்டிருப்பதை சுட்டிக்காட்டி தேர்தலுக்கு ஒரு முகம் இப்போது ஒருமுகமா என கேட்கின்றனர்.

இது இப்படியிருக்கையில் சிம்மசொப்பனமான சனல் 4 ஊடகத்தின் ஊடகவியலாளர்களுக்கு இந்தியாவே விசா மறுப்பு தெரிவித்த வேளையில் இலங்கை விசா வழங்கி அவர்களை அனுமதித்திருந்தமை பலராலும் வியப்பாக பார்க்கப்பட்டிருந்தது. ஆயினும் அது அரசுக்கு வில்லங்கத்தினை விலை கொடுத்து வாங்கியதற்கு ஒப்பானதாக இன்று மாறிவிட்டிருக்கின்றது. அவர்கள் பிரித்தானிய பிரதமரின் ஊடகபிரிவுடன் வந்திருந்தாலும் தனித்துவமாக இயங்க ஆரம்பித்திருப்பதை அண்மைய நடவடிக்கைகள் காட்டுகின்றன. விமான நிலையத்தில் வந்திறங்கியவுடன் அவர்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த எதிர்ப்பை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அவ்வேளை தாம் இங்கு வரும் விடயங்கள் எவ்வாறு உங்களுக்கு தெரியவந்தது என்று விசனத்துடன் கலும் மக்ரே கேட்டிருந்தார். என்றாலும் அது இரகசிய தொடர்பாடல்களை பயன்படுத்தி ஆவணப்படம் எடுத்த கலும் மக்ரேயிற்கு வந்திருக்கக்கூடாத சந்தேகம்.

தொடர்ந்து சனல் 4 ஊடகவியலாளர் ஜோனத்தன் மில்லர் ஜனாதிபதி தொடக்க நிகழ்வொன்றில் கலந்து திரும்பும்போது ஊடறுத்து சென்று கைலாகு கொடுத்து கேள்வி கேட்கையில் இன்னும் சர்ச்சை கிளப்பியது. கடைசியில் சனாதிபதி ஏன் என்னுடன் நீங்கள் தேனீர் அருந்தக்கூடாது என்று கேட்டு ஒரு சந்திப்புக்கு அடிக்கல் நாட்டியது வரை சென்றுவிட்டது.

அடுத்த நகர்வாக அவர்கள் வடக்கிற்கு விஜயம் செய்வதற்காக யாழ்தேவியில் ஏறி அநுராதபுரம் வரும்வரை பலருக்கு அவர்கள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்று தெரிய வந்திருக்கவில்லை. அரசின் அனுசரணையில் அவர்கள் ஆர்ப்பாட்டாக்காரர்களால் அநுராதபுரத்தில் மறிக்கப்பட்டதும் முன்னரே எதிர்பார்க்கப்பட்டபடி கடைசிநேரத்தில் வந்த காவல்துறை கனகச்சிதமாக அவர்களை கொழும்புக்கு அழைத்துச்சென்றது. ஆர்பாட்டக்காரர்களை கட்டுப்படுத்த முடியாது என்ற காரணத்தினை காவல் துறை முன்வைத்திருந்ததை கலும்மக்ரே மட்டுமல்ல எவரும் நம்பவில்லை.

வடக்கில் சுமுக நிலை என்றால் ஏன் வடக்கிற்கு அந்த ஊடகவியலாளர்களை அனுமதிக்க கூடாது. காணாமல் போன உறவுகள் தமது உணர்வினை அமைதியாக வெளிப்படுத்த ஏன் தடை போடவேண்டும் என்ற கேள்விகளுக்கு நடுவுநிலைமையில் நின்று பதிலளிக்க எந்த ஒரு அரச ஆதரவாளருக்கோ அவர்கள் தரப்பு ஊடகவியலாளர்களுக்கோ முடியாது. ஊடகவியலாளர்களாக இருந்துகொண்டு எனது தாய்நாட்டுக்கு எதிராக எப்படி இப்படி உம்மால் காணொளி தயாரிக்கமுடியும் என்று கேட்டவர்கள் அவர்கள். எனவே அவர்களிடம் ஊடக தர்மத்தினை எதிர்பார்க்க முடியாது. சிங்கள ஊடகவியலாளர்களோ அரசுடன் இணங்கிப்போகின்றவர்களோ அல்லது அரசின் கருத்துக்களுக்கு ஒத்து ஊதும் சில தமிழ் ஊடகவியலாளர்களோ இது குறித்த மௌனமாகவே உள்ளனர்.

ஒரு அரச ஆதரவாளருக்கோ அவர்கள் தரப்பு ஊடகவியலாளர்களுக்கோ துணிவு கிடையாது. ஊடகவியலாளர்களாக இருந்துகொண்டு எனது தாய்நாட்டுக்கு எதிராக எப்படி உம்மால் காணொளி தயாரிக்கமுடியும் என்று கேட்டவர்கள் அவர்கள். எனவே அவர்களிடம் ஊடக தர்மத்தினை எதிர்பார்க்கமுடியாது. சிங்கள ஊடகவியலாளர்கள் மற்றும் அரசின் கருத்துக்களுக்கு ஒத்து ஊதும் சில தமிழ் ஊடகவியலாளர்களோ இது குறித்த மௌனமாகவே உள்ளனர்.

தமிழ் அரசியல்வாதிகள் முக்கியமான கட்டங்களில் பேசாது இருக்கிறார்கள் என்றே படுகின்றது. மாநாட்டு நேரத்தில் மௌன விரதம் இருக்கிறார்களோ என எண்ணத் தோன்றுகின்றது .ஆரம்பத்தில் கூட்டமைப்பு பேச்சாளர் அடிக்கடி ஆர்ப்பரிப்பது வழமை. கெகலிய ரம்புக்வெல கூறும் கருத்துக்களுக்கு உடனுக்குடன் எதிர்ப்பு வெளியிட்டு வந்த அவர் கூட அமைதியாக இருப்பதாக தெரிகிறது. வடமாகாண அமைச்சரவை பகிர்வுகளின் பின்னணியில் அவர் அடக்கி வாசிப்பதாக தெரிகிறது.

அவ்வேளை தாம் இங்குவரும் விடயங்கள் எவ்வாறு உங்களுக்கு தெரியவந்தது என்று விசனத்துடன் கலும் மக்ரே கேட்டிருந்தார். என்றாலும் அது இரகசிய தொடர்பாடல்களை பயன்படுத்தி ஆவணப்படம் எடுத்த கலும் மக்ரேயிற்கு வந்திருக்கக்கூடாத சந்தேகம்.

பொது நலவாய மாநாட்டுக் காலத்தில் வலி வடக்கு காணி விவகாரமாக உண்ணாவிரத போராட்டம் நடாத்துவதில் கூட்டமைப்பு முன்னிற்கிறது அத்துடன் அவ்வப்போது வரும் பிரதிநிதிகளுக்கு போட்டுக்கொடுப்பதோடு அவர்கள் திருப்திப் பட்டுக் கொள்கின்றனர். மற்றயபடி அடுத்தகட்ட அரசியல் குறித்து திட்ட மிடுவதோ அல்லது தொடர்ச்சியான கள அரசியலை அவர்கள் செய்வதாகவோ தெரியவில்லை. தோல்வியில் உள்ள ஐக்கிய தேசியக்கட்சி அரசின் நடவடிக்கைகள் குறித்த கவனம் செலுத்தி அவ்வப்போது பதிலளிக்கும் வகையில் கூட தமிழ் அரசியல் வாதிகள் தொழிற்படுவதில்லை என்ற குற்றச் சாட்டு பலராலும் முன் வைக்கப்படுகின்றது. அவர்கள் எப்போதும் ஒரு குறுகிய வட்டத்திற்குள் உணர்ச்சியரசியலை மட்டும் செய்து கொண்டிருப்பதாக குற்றம் சுமத்தப்படுகிறது

அநியாயங்களை வெளிக்காட்டுவதில் தகவல்களை சரிவர கூறுவதிலும் இலங்கையில் ஊடகவியலாளர்கள் பலர் ஒரு தலைப்பட்சமாகவே இருக்கின்றார்கள் என்பதில் எந்தவித மறுப்பும் இருக்கமுடியாது. ஏதோ ஒன்றுக்காக ஒரு பக்கத்தினை மறைக்கின்றனர் அல்லது மறந்து விடுகின்றனர்.சனல் 4 போன்ற ஊடகவியல் பண்பாடு இன்னும் இலங்கையில் வளரவில்லை. ஆனால் இதுகுறித்து பேசும்போது தமது ஊடகவியல் சுதந்திரத்தின் நிலை பற்றி கேள்வி எழுப்புகின்றனர். உண்மைதான் ஆனால் உயிருக்குப் பயந்து உண்மைகள் உறங்குவதை எல்லாவேளையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

அரசு தரப்பிலும் தமிழர் தரப்பிலும் இருக்கும் சரி பிழைகளை தயங்காமல் மறைக்காமல் பாரபட்சம் இன்றி வெளிக்கொண்டு வரவேண்டியது ஊடகவியலாளர்களின் கடமை. அதேவேளை சக ஊடகவியலாளர்களுக்கு அநீதி இழைக்கும்போது அவர்களுக்காக குரல்கொடுக்க வேண்டிய கடமையும் இவர்களுக்கு உண்டு. கண்மூடித்தனமாக ஒருபக்கமாக எழுதிக் கொண்டிருப்பது ஊடக தர்மமாகாது. நாம் புலிகளின் மனித உரிமை மீறல்கள் குறித்தும் ஆவணப்படத்தில் சொல்லியிருக்கின்றோம் என்று ஆர்ப்பாட்டக்கார ஊடகவியலாளரிடம் கூறும் கலும்மக்ரே மட்டுமல்ல உலகத்தின் கண்களை திறந்த சனல் 4 ஊடகமும் நமக்கு நிறைய விடயங்களை சிந்திக்க வைத்திருக்கின்றன. நாம் "ஏன் என் அண்ணனை பிடிச்சுவைச்சிருக்கிறியள்" என்று கதறும் காணாமல்போன உறவான சிறுமியின் கேள்விக்கு பதிலளிக்க முடியாத அரசினால் நடாத்தப்படும் பொது நலவாயநாடுகளின் மாநாட்டில் இருந்து ஏதாவது நமக்கு நன்மை கிடைக்கும் என்று நப்பாசையுடன் இருப்போம் எனில் அது கனவாகவே இருக்கும்! நாம் நம்மை மீள் பார்வை செய்யவேண்டும்.

- தவா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது முரசொலி
நமது முரசொலி
Namathu Murasoly
வார இதழ் 13
இல.: 18/1, இளையதம்பி ஒழுங்கை, செம்மணி வீதி, நல்லூர்.
E-Mail: namathumurasoli@gmail.com, Tel: 0773673829

சனல் 4 இனால் என்ன செய்ய முடியும்?

கடந்த வாரம் தலைநகரம் கொழும்பு பொதுநலவாயக் கொண்டாட்டங்களினால் பன்னீரில் தோய எங்கள் தமிழர் தலைநகர் யாழ்ப்பாணம் கண்ணீரால் தோய்ந்திருக்கின்றது. நடுஇரவில் வெள்ளை வானில் கடத்தப்பட்டும், போர் இருளில் கையளிக்கப்பட்டும் காணாமல் போன உறவுகளைத் தேடும் ஏதிலிகளின் அவலக்குரலால் பொது நூல் நிலைய சுற்றுப்புறம் வெம்பி வெடித்து வேதனைப்பட்டு நின்றது. தமிழர்கள் வாழ்வியலில் உள்ள அத்தனை உறவுமுறைகளையும் தொலைத்த சமூகமொன்று அணிதிரட்டு தமக்கு நீதி கிடைக்கும் எனும் அற்ப நம்பிக்கையில் உரத்து அவலக் குரல் எடுத்தது. மகனையோ மகளையோ தொலைத்த தாயும், தந்தையும் கணவனைத் தொலைத்த மனைவியும், மனைவியைத் தொலைத்த கணவனும், அண்ணனையும் தம்பியையும் காவுகொடுத்த சோதரிகளும் சோதரிகளைத் தொலைத்த சோதரன்களும் என அத்தனை வகையினரும் திரண்டு வந்து ஏங்கிநின்றனர்.

வருகின்ற அத்தனை வாகனங்களிலும் தமது கோரிக்கைகளை செவிமடுக்கவல்ல இறைதூதர்கள் இருப்பதாக வாகனங்களுக்கு குறுக்கே நின்று மறித்து உரத்து முறையிட்டனர். காணாமல் போன தமது உறவுகளின் படங்களைக் காட்டி நீதி கேட்டனர். வந்தவர்களுக்குப் புரியத்தக்க மொழியில் தமக்குத் தெரிந்த வாசகங்களை வானதிர முழங்கி மன்றாடி நின்றனர். வாகனங்களை விட்டு இறங்காத சில கனவான்கள் கண்ணாடிகளை மட்டும் இறக்கி கைகளை அசைத்தனர். கொடுத்த காகிதங்களை வாங்கி பக்கத்தில் வைத்துக் கொண்டனர். இருந்தும் ஈழத்தமிழர்களின் ஆபத்பாந்தவர்களாக கருதப்படும் சனல் 4 குழுவினர் கூடியிருந்த மக்கள் மத்தியில் வந்தபோது கடவுளைக் கண்டுவிட்ட திருப்பதியில் தங்கள் முறைப்பாடுகளை ஒரே நேரத்தில் அத்தனை பேரும் உரத்து ஒலித்தும் காகிதங்களை கையளித்தும் திருப்திப்பட்டுக்கொண்டனர்.

சனல் 4 ஊடகக்காரரும் கொடுக்கப்பட்ட அத்தனை ஆவணங்களையும் கனத்த மனத்துடன் கையேற்றுக்கொண்டார். கண்களும் கலங்கி நின்றார். கைகளில் நிறைந்த காகிதக்கட்டுக்கள் சொல்லும் கதையை காணொளியாக காற்றினில் பறக்கவிட சங்கற்பம் செய்திருப்பார். அதைவிட அவரால் என்ன செய்ய முடியும். காணாமல் போனவர்களை கைபிடித்து அழைத்துவரத் தான் முடியுமா? அல்லது உறவுகளை கூட்டிச் சென்று காட்டத்தான் முடியுமா? அல்லது தடுத்து வைக்கப்பட்டுள்ள முகவரிகளை கண்டறிந்து சொல்லத்தான் முடியமா? ஆனால் ஒன்று மட்டும் முடியும்.

அடிக்கடி எங்கள் அவலக்கதையை உலகம் மறக்காவண்ணம் ஒளிப்பதிவிட முடியும். அதன்வழி தங்காலிகமாகவேனும் எங்கள் தமிழர்கள் குருதியை கொதிக்கச்செய்து உணர்வேற்ற முடியும். மகிந்த அரசுக்கு சிறிய தலைவலியையேனும் கொடுக்க முடியும். இதற்காக சனல் 4 ஊடகக்காரர் உலகத்திரைகளில் ஒரு ஆவணப்படத்தை திரையிடலாம். அதை நாம் எங்கள் இணையங்களிலும் முகப்புத்தகங்களிலும் தரவேற்றி பகிர முடியும். நமக்குள்ளேயே திசைபிரிந்து நின்று அது தொடர்பில் விவாதிக்க முடியும். மீண்டும் கொஞ்ச நாளில் உறவுகளைத் தொலைத்தவர்கள் தவிர்ந்த ஏனையோர் அத்தனை நிகழ்வுகளையும் மறந்து எங்கள் அன்றாடக் கடமைகளில் மூழ்கிப் போக ஆறின கஞ்சி பழங் கஞ்சியாக அத்தனையும் ஆறிப்போய்விடும் தொலைத்தவர்களின் மனங்களைத் தவிர.

அதிலும் பொதுநூலகப் பகுதியை நீதிக்கான திடலாக எண்ணித் திரண்ட மக்களையும் துணைநின்ற மதகுருமாரையும் தங்கள் வழக்கமான பாணியில் இலங்கைக் காவல்துறையினர் பாய்ந்து தாக்கியதை காயங்கள் ஆற முன் நாம் மறந்து போகலாம். அதற்கு முன் நாமும் உளோம் என ஞாபகமூட்டலுக்காக கண்டன அறிக்கைகளை உள்ளூர் ஊடகங்களில் விடுத்து உலகத்துச் செவிகளில் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டோம் என பக்கத்தில் இருப்போருக்கு சொல்லி திருப்திப்பட்டுக்கொள்ளலாம். இதைத் தான் எம்மவரால் செய்ய முடியும். செய்ய முடிந்திருக்கின்றது.

மாறாக மறந்து போகாது நீர்த்துப் போகாது தொடர்ந்து கொண்டு செல்லத்தக்க பொறிதுமுறைகளை உருவாக்க வேண்டும். அதற்காய் என்ன செய்யலாம். சுயநலம் கடந்து ஒன்றுபடவேண்டும். கமறுன் தங்கள் காலடிக்கு வந்த களிப்பில் தலைப்பிட வேண்டிய அவலப்பட்ட மக்களின் செய்திகளை கட்டம் கட்டத்தன்னும் மறந்த ஊடகங்கள் பொதுநன்மை கருதி சிந்திக்க வேண்டும்.

உப்பரிகையில் நின்று உறவுகளைப் பார்த்தவர்கள் இறங்கி வரவேண்டும். கார்க்கதவுகளை திறக்க மறுத்தோர், மறந்தோர் காலாறா மக்களுடன் நடந்து கதை கேட்க வேண்டும். முகப்புத்தகங்களில் முரண்பட்டு விவாதிப்பதை நிறுத்தி காணாமல் போன அத்தனை பேரினதும் விபரங்களை கணணிமயப்படுத்தி ஓர் தனித்த இணையத்தளத்தை உலகம் முழுமைக்கும் புரியத்தக்கமொழியில் உருவாக்கி, அதன் வழி சரியான புள்ளிவிபரங்களை சேகரித்துக்கொள்ள வேண்டும். எங்கள் கண்டனங்களை காட்டமாக தமிழில் வெளியிட்டு சுயதிருப்தி கொள்வதை விட காத்திரமாக உலகின் காதுகளுக்கு அருகில் தானும் கொண்டு செல்ல வேண்டும். எம்மைப் போன்று பாதிக்கப்பட்டவர்கள் தங்களுக்கான நீதித் தேடலுக்காக கையாண்ட உத்திகள் குறித்து விவாதிக்க வேண்டும். விளக்க வேண்டும். காழ்ப்புணர்வுகளுக்குள் கட்டுப்பட்டு நின்று அணிபிரிந்து விவாதிப்பதை விடுத்து கருத்தொருமித்து பயணிக்க வேண்டும். இதுவே இன்று தமிழர்கள் முன்னுள்ள காலக்கடனாகும்.

"கடமைகளை மறப்பவனுக்கு உரிமைகள் மறுக்கப்படும் இது உலக நியதி"

எங்கள் காணிகளை எப்படி மீட்கலாம்? காப்பாற்றலாம்?

காடுகளை வெட்டி களனியாக்கியவன் தமிழன் என பெருமைப்படுபவர்கள் நாம். வன்னிப் பெருநிலப் பரப்பில் வளமிக்க பல நகரங்களை உருவாக்கியதில் எங்கள் மக்களின் கடின உழைப்பும் காடு வெட்டி காணி பிடிக்கும் திறனும் கொண்டிருந்த பங்களிப்பை மறுப்பதற்கில்லை. அதுபோன்றே விரிந்து கிடக்கும் வன்னி வயல்களை உருவாக்கிய பெருமையும் நம் மக்களுக்கு உண்டு. படித்த வாலிபர் திட்டம் போன்ற பல திட்டங்களின் படி தமக்குக் கிடைத்த நிலங்களை விவசாய நிலங்களாகவும் மாஞ்சோலைகளாகவும் மாற்றி பசுமைப் புரட்சி செய்தவர்கள் எங்கள் அப்போதைய படித்த வாலிபர்கள். ஏக்கர் கணக்கில் தமக்கு வழங்கப்பட்ட நிலங்களை வளம் கொழிக்கும் விளைநிலங்களாக மாற்றி தங்கள் பொருளாதார கட்டுமானத்தை உயர்த்தி விலங்கு வேளாண்மையையும் துணைசேர்த்து தன்னிறைவுப் பொருளாதாரத்தில் நிமிர்ந்து நின்றவர்கள் நம் தமிழர். ஆனால் நிலமை இன்று?

சொந்தக் காணிகளை சோரத்துக்கு விட்டுவிட்டு ஏக்கத்து டன் காத்து நிற்க வேண்டிய நிலமை. இந்த இடர் நிலை தமிழர் தாயகப்பரப்பின் தலையிலிருந்து இதயம் தாண்டி அத்தனை இடங்களிலும் பரவிக்கிடக்கின்றது புற்றுநோயாக. வடக்கில் வலிகாமம் வடக்கு உயர்பாதுகாப்பு வலயங்களும் வேறு சில பிரதேசங்களும் வன்னியில் கேப்பாப்புலவு பரவிப்பாஞ்சான் எனவும் முல்லைத்தீவில் கொக்குளாய் கொக்குத்தொடுவாய் மணலாறு எனவும் நீண்டு திருகோணமலையில் சம்பூரில் வந்து முடிகின்றது தமிழர் காணிகளின் சோரம் போதல்.

ஒவ்வொரு இடங்களிலும் சட்டத்துக்கு உட்பட்டு ஒவ்வொரு காரணங்கள் சொல்லப்பட்டு சட்டத்துக்கு முரணாக காணிகள் கபளீகரம் செய்யப்படுகின்றன. விமான நிலைய விஸ்தரிப்பு, அணல் மின்நிலைய அமைப்பு, குடியேற்றத்திட்டங்கள், கனிய வள உற்பத்திக்கான தொழிற்சாலைகள் அமைப்பு என பல அபிவிருத்திக்கான காரணங்கள் கூறப்பட்டாலும் உள்ளே ஒழிந்திருக்கும் ஒற்றைக் காரணம் தமிழர் இனப்பரம்பலை வடக்கு கிழக்கில் இல்லாதொழிப்பதேயாகும். சமாந்தரமாக அபிவிருத்தி என்ற போர்வைக்குள் சிங்களகுடியேற்றங்களை உருவாக்கி ஒரு இனக்கலப்பை வலிந்து ஏற்படுத்தி தமிழர் தாயகம் என்பதை ஒரு மாயையாக உருவாக்குவதே பிரதான திட்டம்.

தமிழர்களுக்கான தனிநாடு என பேசப்பட்ட நிலப்பரப்பில் சில பகுதிகளை நாமே இலகுவாக மறந்து விட்ட நிலையில் எஞ்சியுள்ள நிலங்களை காப்பாற்ற உண்ணாதிருக்கவும் ஊர்வலம் போகவும் ஊடக அறிக்கைகளை விடவும் வேண்டியிருக்கின்றது. அதேவேளை எங்கள் காணிகளை காப்பாற்றுவது தொடர்பில் நாமும் அசமந்தமாகவிருப்பதும் செய்யக்கூடிய விடயங்களை செய்யாதிருப்பதும் மோசமான விளைவுகளை நமதாக்கும்.

கடந்த வாரம் காரைநகரில் பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தமர்வில் கலந்து கொண்ட போது கலந்துரையாடிய கோட்டக்கல்விப் பணிப்பாளர் தங்கள் கோட்டத்தில் ஐந்தாமாண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பிள்ளைக்கு குடியிருக்க ஒரு வீடு இல்லை எனவும் அந்தக் குடும்பத்துக்கு சொந்தமாக ஒரு துண்டு நிலமும் இல்லை எனவும் மிகச்சிறிய குடிசையொன்றுக்குள் அவர்கள் வாழ்வு கழிவதாகவும் கவலையுடன் தெரிவித்திருந்தார். ஆனால் காரைநகரின் காணும் திசைகளில் அங்கொன்றும் இங்கொன்றுமாக பல வீடுகள் கவனிப்பாரற்று பற்றை மண்டிக் கிடக்கின்றன. வீட்டு

காரைநகரின் காணும் திசைகளில் அங்கொன்றும் இங்கொன்றுமாக பல வீடுகள் கவனிப்பாரற்று பற்றை மண்டிக் கிடக்கின்றன. வீட்டு உரிமையாளர்கள் புலம்பெயர்ந்து அந்த நாடுகளுக்குரியவர்களாக தம்மை மாற்றியமையால் அவர்கள் வீடுகள் வெளவால்கள் இருப்பிடமாகவும் விளைநிலங்கள் தரிசுகளாகவும்

உரிமையாளர்கள் புலம்பெயர்ந்து அந்த நாடுகளுக்குரிய வர்களாக தம்மை மாற்றியமையால் அவர்கள் வீடுகள் வெளவால்கள் இருப்பிடமாகவும் விளைநிலங்கள் தரிசுகளாகவும் பயன்பாடற்றுக்கிடப்பதாக ஊரைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார். ஆனால் இன்னும் அந்த ஐந்தா மாண்டுப் பிள்ளைக்கான வீட்டினை அவர்கள் கண்டுபிடித் திருக்கவில்லை.

மேற்குறித்த நிலமை எங்கள் தீவுப்பகுதிகளின் அத்தனை இடங்களிலும் மட்டுமன்றி காணி மீட்கப் போராடும் பகுதிகளிலும் தொடர்கின்றது. வலிகாமம் வடக்கின் மீட்கப்படவேண்டிய காணிகளின் சொந்தக்காரர்கள் பலர் வெளிநாடுகளுக்குச் சென்றிருப்பதுடன் கொழும்பு வெள்ளவத்தை வாழ்க்கைக்குள்ளும் யாழ்ப்பாணத்தின் நகர வாழ்க்கைக்குள்ளும் தம்மை தொலைத்தமையால் வலி காமம் வடக்கிலுள்ள தங்கள் காணிகள் குறித்து அவ்வளவு அக்கறை கொள்வதில்லை. அதுபோன்றே விடுவிக்கப்படும் தங்கள் காணிகளை உடனடியாகவே விற்பனை செய்வதற்கும் அவர்கள் தயாராகவேயுள்ளார்கள். விலைகொடுத்துப் பெறும் சுதந்திரத்தை விலை பேசத்துணிவது வேதனையானது. இது எழுந்தமான மான முடிவல்ல. முன்னர் விடுவிக்கப்பட்ட காணிகள் பல விற்பனைக்காக பத்திரிகைகளில் விளம்பரப்படுத்ப் பட்டமையை ஆதாரமாக காட்ட முடிவதுடன் பல காணிகள் விற்கப்பட்டமையையும் காணிப்பதிகத்தின் தரவுகளுடன் உறுதிப்படுத்த முடியும்.

எனவே எங்கள் காணிகளை மீட்பது மட்டும் எமக்கான தேவையல்ல. மாறாக அவற்றை தொடர்ந்து தக்கவைப்பதும் எமது பரம்பரை அங்கு வாழ்ந்து மடிந்தது என்பதை ஆதாரப்படுத்துவதும் மிக அவசியமானது. காணிகளை மீட்டு வாழ விருப்பமற்றவர்கள் வாழ்வதற்கு காணி அற்ற எங்கள் இன மக்களுக்கு இவற்றை மனமுவந்து கொடுத்து குடியேற்றினால் எதிர்காலம் தரப்போகும் அபாயத்திலிருந்து தப்பிக்கொள்ள முடியும். இதற்கு உடன்படாவிடில் எங்கள் காணிகளில் எவனோவொருவன் வந்து ஆட்சி செய்வதை வேலிக்குள் வெளியில் நின்று கூட பார்க்க முடியாத வேதனை நிலை உருவாகலாம். பரப்புக் கணக்கில் பரந்து கிடக்கும் காணிகளில் ஓரிரு பரப்புக்களை உறவுகளுக்கு கொடுத்து வீட்டுத்திட்டங்களின் வீடுகளை அமைத்து மீகுதிக்காணியை இவர்கள் வாழ்வாதாரத்துக்கு பிரதியுபகாரமற்ற குத்தகை அடிப்படையில் கொடுத்தால் எம்மினம் வாழும் பிரதேசமாக எங்கள் தேசமிருக்கும். இந்த நிலை வலிகாமம் வடக்குக்கு மட்டுமல்ல கொக்குளாய் என அத்தனை இடங்களுக்கும் பொருந்தும்.

எந்த வனாந்தரத்திலும் குடியேறி வாழத் தயாராயிருக்கும் சிங்கள மக்களைப் அரசு பயன்படுத்தி எங்கள் காணிகளை சுவீகரிப்பதை தவிர்க்க முதலில் நாம் குடியேறுவோம். நாவற்குழியில் தமிழர்களின் பாவிக்கப்படாத நிலங்களில் தான் அவர்கள் குடியேறினார்கள். இந்த நிலை நாளை பொம்மை வெளியிலும் மகேஸ்வரன் அமைத்த திருவாவடுதுறை ஆதினக் குடியிருப்புக்களிலும் இடம்பெறலாம். ஏன் தீவுப்பகுதிகளிலும் தீவிரமாக நடக்கலாம். இந்த நிலையைத் தவிர்க்க இராணுவப் பிடிக்குள் அகப்படாதுள்ள நிலங்களில் நம்மவர்கள் வாழ முதலில் வழி செய்வோம். சமூக ஏற்றத்தாழ்வுகள் வரட்டுக்கௌரவங்களைக் களைந்து எடுக்கும் முடிவுகள் எங்கள் காணிகளை காப்பாற்றும்.

- பல்லவன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
PUBLIC LIBRARY

அகமும் புறமும்

புளிய மரம் நட்ட புத்திசாலிகள்

கடந்த வாரம் ஜனாதிபதியின் பிறந்த தினத்தை முன்னிட்டு நாடாளவிய ரீதியில் மரம் நடுகைத் திட்டமொன்று தேசத்துக்கு நிழல் எனும் தலைப்பில் முன்னெடுக்கப்பட்டது. பொதுநலவாய மாநாட்டின் நினைவு என பிரகடனப்படுத்தப்பட்டிருந்தாலும் ஜனாதிபதியை திருப்திப்படுத்துவதே இதன் நோக்கம் என்கின்றன அரச அலுவலக வட்டாரங்கள். எதுஎவ்வாறெனினும் மரங்களை நடவேண்டியது இன்றைய காலத்தின் தேவை. அது மகிந்தவைச் சாட்டியென்றாலும் மாவீரரைச் சாட்டியென்றாலும் நல்ல விடயம் தான். கிராமசேவையாளர்களும் மக்களுக்கான பணிகளில் காட்டும் அக்கறையை விட மரம் நடுவதில் அதிக அக்கறை காட்டியதாகக் கூறப்படுகின்றது. இருந்தும் சிலர் பழையதை ஞாபகப்படுத்திற மாதிரி புளிய மரமும் புளிப்புச்சுவையுள்ள எழுமிச்சை மரமும் நட்டதாகவும் ஊர்க்குருவி காதில் சொல்லிப்போகின்றது. அந்த மாதிரி வடக்கின் விவசாய அமைச்சரும் சுற்றுச்சூழலுக்கு எல்லைகளும் இல்லை அரசியல் வேறுபாடுகளும் இல்லை என்று தானும் மரம் நட்டு சூழலியலில் சகோதரத்துவம் பாராட்டியுள்ளார். விவசாய அமைச்சர் பழைய ஞாபகமாக வருகின்ற இருபத் தேழு மரம் நடுகை செய்யேக்கை இந்த சகோதரத்துவம் எப்படியிருக்கும் எண்டு பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

அரசியல்ல இதெல்லாம் சகஜமப்பா

மாட்டுத் தலை இனித் தேவையில்லை
இரண்டு தலைகள் உண்டு பொருதிக்கொள்ள

கடந்த வாரம் வலிவடக்கு மக்களினால் முன்னெடுக்கப்பட்ட மீள்குடியமர்வுக்கான கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னின்று ஒழுங்குபடுத்திய வலி வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் மற்றும் உப தவிசாளர் சண்முகலிங்கம் சஜீவன் ஆகியோரின் வீடுகளுக்கு முன்னால் மாட்டுத் தலை வைத்து அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் தொலைபேசி மூலமாகவும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும் குறித்த அச்சுறுத்தல் அழைப்புக்களைத் தவிர்த்த போது குறுஞ்செய்தி மூலம் அச்சுறுத் தல் விடுக்கப்பட்டதாகவும் சுகிர் தன் ஊடகங்களுக்கு தெரியப்படுத்தியுள்ளார். மூன்று நாள்கள் நடைபெற்ற இப் போராட்டத்துக்கு பல வழிகளிலும் இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டு எதிர்த்தரப்புக்களினால் அப்போராட்டம் அதிக கவனம் கொடுக்கப்பட்டதாக மாறியுள்ளது. இது இவ்வாறிருக்க வடக்கின் முதலமைச்சர் மூன்று நாள் போராட்டத்தில் இரண்டாம் நாள் பத்து நிமிடம் மட்டும் கலந்து விட்டு வெளிநாட்டு ஊடகங்களுக்கு பேட்டி கொடுத்துவிட்டுக் கிளம்பிவிட்டார்.

மூன்று நாள் போராட்டத்தின் முடிவில் வலிவடக்குத் தவிசாளரின் ஏற்பாட்டில் வலி வடக்கு புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்றச் சங்கம் என ஒன்று அமைக்கப்பட்டு அதற்கான நிர்வாகமும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந் நிலையில் முன்னர் இதே நோக்கத்தில் சங்கத்துக்குப் பதிலாக குழு வொன்று மறைந்த அதிபர் ஆ.சி.நடராஜாவினால் அமைக்கப்பட்டு இயங்கிவந்தமை குறிப்பிடத்தக்கது. அவரது மறைவுக்குப் பின்னர் தற்போது வலிகாமம் வடக்கு உப தவிசாளர் சஜீவன் குறித்த குழுவின் தலமைப் பதவியை வகித்து வரும்போது அது குறித்து அதிருப்தி அடைந்த தரப்பு இப்போது சங்கத்தை தோற்றுவித்துள்ளனர். குழுவும் சங்கமும் முரண்டுபிடிக்க இனி காலம் சரியாகவிருக்கும். போகவேண்டிய திசையை மறந்து நமக்குள்ளே பிடுங்குப்பட செலவழிக்கும் நேரத்தை பொது எதிரியுடன் பொருதப் பயன்படுத்தினால் நன்றாகவிருக்கும். ஆர்குற்றியும் அரிசியானால் சரி என்பது மக்கள் நிலைப்பாடு.

இது இவ்வாறிருக்க வலிவடக்குப் போராட்டத்தில் பத்து நிமிடத்துடன் திரும்பிய முதலமைச்சர் முஸ்லீம்களின் மீள்குடியமர்வு குறித்து ஊடக மாநாட்டைக் கூட்டி அறிக்கை விடுகின்றார். முஸ்லிம் மக்களின் மீள்குடியமர்வு குறித்து கதைப்பது தவறல்ல அதற்குரிய கனதியை தமிழர் பிரச்சனைக்கும் கொடுக்கவேண்டும் என்பது தான் அடிமட்ட மக்களின் எதிர்பார்ப்பு. அது சரி இதில் என்ன இராஜதந்திரம் இருக்குமோ. நமக்குத் தெரியாது.

ஊர் இரண்டுபட்டால்
கூத்தாடிக்கு கொண்டாட்டம்

தொடரும் வலயக் கல்விப்பணிப்பாளரின் தகிடுதத்தித் தனங்கள்.

வலிகாமம் கல்வி வலயத்தில் அண்மைக்காலமாக நடைபெற்று வரும் விடயங்கள் குறித்து இவ்விடத்தில் ஏற்கனவே ஒரு தடவை பிரஸ்தாபித்திருந்தோம். இப்போது இன்னும் பல விரும்பத்தகாத சம்பவங்கள் தொடர்வதாகத் தெரிகின்றது. வருகின்ற டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த சாதாரண தர பரீட் சைக்கான நிலையங்களை அமைப்பது தொடர்பில் முட்டாள் தனமாக செயற்பட்டுள்ளார் வலயக் கல்விப் பணிப்பாளர். கணிசமான மாணவர்கள் பரீட்சைக் குத் தோற்றும் உடுவில் மகளிர் கல்லூரி மற்றும் யாழ்ப்பாணக் கல்லூரியில் பரீட்சை நிலையங்களை அமைக்காது அங்கு கல்வி கற்கும் மாணவர்க ளுக்கு வேறிடங்களுக்கு பரீட்சை மண்டபங்களை அமைத்துள்ளார். உடுவில் மகளிர் கல்லூரி அதிபருக்கும் தனக்கும் உள்ள தனிப்பட்ட பகமை உணர்வை மாணவர்களின் கல்வியில் காண்பிக்கும் மனப்பக்குவம் உள்ள கல்விப்பணிப்பாளர் மீது இருந்த கொஞ்சம் மரியாதையும் இப்போது இல்லாமல் போய்விட்டது என்கின்றார் இதுவரை காலமும் பணிப்பாளருக்கு ஆதரவாகச் செயற்பட்ட அதிபர் ஒருவர். தமது மதம் சார்ந்த பிரத்தியேகப் பிரச்சனையொன்றினை அடிப்படையாக வைத்து தனது அதிகாரத்தை துஸ்பிரயோகம் செய்யும் கல்விப்பணிப்பாளர் நடந்து கொள்ளும் விதம் தமிழர் எதிர்காலத்துக்கு ஏற்புடையது அல்ல. மாகாண கல்வி அமைச்சரும் தன்னை ஒன்றும் செய்ய முடியாது என்பதாகவும் அவரது கதைகள் இருப்பதாக வும் பேசப்படுகின்றது. யாரும் யாரை யும் எதுவும் செய்யமுடியாது என்பதற்கு அப்பால் போர் பாதித்த எங்கள் தமிழ் சமூகத் துக்கு ஏதாவது செய்தாக வேண்டும். கல்விப் பணிப்பாளரே இது உங்கள் கவனத்துக்கு.

சாகீத்துக்கு கனவிலும்.....

காலால் இட்ட கட்டளையை
தலையால் செய்யும்'கல்வியாளர்

வகையான அதிர்வுகளை ஏற்படுத்தியிருந்தது. ஆர்ப்பாட்டங்கள் வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் வருகைகள் வடக்குக்கான விஜயங்கள் என அரசியல் தளம் களைகட்ட கல்வித் தளத்தில் பல்கலைக்கழகங்களுக்கு கட்டாய லீவு கொடுத்து அசத்தியிருக்கின்றார்கள் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினர். அவர்களது அறிவுறுத்தலைப் பார்த்த போது விமானத்தில் போன அமைச்சருக்காக வீதிப் போக்குவரத்தை தடைசெய்த விவேக்கின் பட நகைச்சுவைக் காட்சிதான் ஞாபகத்துக்கு வந்தது. அதிலும் ஒரு படி மேலே போய் தாங்கள் தான் தமிழ்த்தேசியத்தின் காவலர்கள் என கருதிக்கொள்ளும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினர் டிசம்பர் மாதத் தொடக்கம் வரை விடுமுறை விடுத்து அசத்தியிருக்கின்றார்கள். அதிலும் மாணவர்களை விடுதிகளில் இருந்து வெளியேற்றியும் பல்கலைக்கழக வளாகத்துக்குள் புகுவதைத் தடைசெய்தும் தமது விசுவாசத்தை அதிகளவில் வெளிப்படுத்தியிருந்தார்கள். மாவீரர் நாள் கொண்டாட்டங்களைத் தவிர்த்துக் கொள்வது தான் இந்த அநாவசிய விடுமுறையின் நோக்கம் என்பது விரல் சூப்பும் குழந்தைக்கும் தெரிந்த விடயம். இருந்தும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமும் விஞ்ஞான பீட ஆசிரியர் சங்கமும் மாணவர் ஒன்றியமும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அறிக்கைகளை விடுத்துள்ளனர். யாரைத் திருப்திப் படுத்த இந்த விடுமுறை என்பது பலருக்கும் புரிந்த இரகசியமாய் உள்ளது. முன்னர் மாணவர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட போதும் பல்கலைக்கழகம் தடையின்றி இயங்கியதை நினைவுகூர்ந்தார் முன்னாள் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதியொருவர். கடந்த காலங்களில் மாணவர்கள் நடந்து கொண்ட விதங்களினால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டமை போன்ற அசம்பாவிதங்கள் இடம் பெறாமையைத் தடுப்பதே நீண்ட விடுமுறையின் நோக்கம் என கடந்த வருடம் மாணவர்களை விடுவிப்பதில் முன்னின்ற விரிவுரையாளர் ஒருவர் தனக்கு நெருக்கமானவர்களிடம் தெரிவித்து வருவதாகவும் இது நிலவுக்கு ஒழித்துப் பரதேசம் போன கதை எனவும் பல்கலைக்கழக வட்டாரங்களில் கதை அடிபடுகின்றது.

வை.திஸ் தொலைவெறி

பேசவேண்டியவை பேசப்படாது போனால் எம்மோடு பேசுங்கள் உங்களுக்காக நாங்கள் பேசுகிறோம்

- யதார்த்தன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரஞ்சீவியாக 12

நம்மை நாமாக வாழ நல்வழி காட்டிய நாவலர்

நாவலர் என்ற பெயருடன் எம்மண்ணில் மூவர் அறியப்பட்டனர். ஆறுமுகநாவலர், சபாபதி நாவலர், அம்பலவாண நாவலர் என்போரே அவர்கள். இருப்பினும் நாவலர் என்றதும் எல்லோரும் நினைப்பது நல்லை நகர் ஆறுமுகநாவலரையே.

அந்நிய சக்திகளின் ஆக்கிரமிப்புக்கு அடிபணியாது, தேசிய உணர்வுடன் மண்ணையும் மக்களையும், அவர்சார்ந்த சைவ வாழ்வியலையும் பேணிய பெருந்தகையாக நாவலரை அடையாளப்படுத்தலாம்.

1822 டிசம்பர் 18 ஆம் திகதி நல்லூர் கந்தப்பிள்ளை சிவகாமி தம்பதிக்கு ஆறாவது பிள்ளையாகப் பிறந்தவரே ஆறுமுகம் என்ற பிள்ளைத் திருநாமம் பூண்ட நாவலர். 1879 ஆம் ஆண்டு டிசம்பர் 5 ஆம் திகதி (கார்த்திகை மக நட்சத்திர நாள்) பூதவுடல் நீத்துப் புகழுடல் எய்தும் வரை மண்ணையும் மக்களையும் நேசித்த மாமனிதராக வாழ்ந்தார்.

விதேசிய மதமும் ஆங்கில மொழியும் எம்மண்ணை ஆக்கிரமித்து சுதேசியத்தையும் தமிழ்மொழியையும் பாதித்த காலத்திலேயே நாவலரின் தோற்றம் முக்கியத்துவப்படுத்தப்படுகின்றது.

"...நான் இல்வாழ்க்கையிற் புகவில்லை. இவைகளெல்லாவற்றிற்கும் காரணம் சைவசமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டும் என்னும் பேராசையேயாம்" என்று இருவேறு இடங்களில் நாவலர் குறிப்பிட்டமையில் இருந்து அவரின் நோக்கம் சைவத்தை வளர்ப்பதென்றும் அதற்கு உதவக்கூடிய முறையில் தமிழ்க் கல்வியையும் அவர் வளர்க்க முற்பட்டார் என்றும் அறிய முடிகின்றது. இவ்வாறு இலட்சியத்தோடு பயணித்தவர் தன்னுடன் தொடர்புடைய வேறு பணிகளையும் முன்னெடுத்தார்.

சமூகத்தை ஆற்றுப்படுத்தக்கூடிய சிறந்த மார்க்கம் பிரசங்கமே என உணர்ந்தார். 31.12.1847 அன்று வண்ணைச் சிவன்கோவிலில் முதன் முதலாகச் சைவப் பிரசங்கத்தை ஆரம்பித்தார். 1879 ஆம் ஆண்டு சுந்தரர் குருபூசை வரை அதாவது இறக்கும் காலம் வரை பிரசங்கப் பணியைத் தொடர்ந்தார்.

பாடநூல்கள் மற்றும் பதிப்பு நூல்கள், உரை நூல்கள் எனப் பல்வகைப்பட்ட நூல்களை வெளியிட்டார். இதற்காக அச்சு இயந்திரசாலைகளை யாழ்ப்பாணத்திலும் தமிழகத்திலும் நிறுவினார். நாவலர் பதிப்புச் சுத்தமானது என்ற நம்பிக்கை ஏற்படும் வகையில் அவரது பதிப்புப் பணிகள் அமைந்திருந்தன.

சைவச்சூழலில் பிள்ளைகள் கல்வி பெற வேண்டும் என்பதற்காக சைவப்பிரகாச வித்தியாசாலைகளை நிறுவினார். ஆங்கில மொழி மூலம் கல்வி போதிக்க வேண்டும் எனக் கருதி 1872 இல் வண்ணையில் ஆங்கில மொழி மூலப் பாடசாலை ஒன்றையும் நிறுவினார்.

கண்டனப் பிரசுர முறைமையை வளர்த்தெடுத்தவரும் நாவலர்தான். தனக்குப் பிடிக்காத – சமூகத்திற்கு ஒவ்வாதது எனக் கருதுகின்றவற்றையெல்லாம் துணிந்து எதிர்த்தார். இதற்குக் கண்டனப் பிரசுரங்களை வெளியிடும் உத்தியைக் கையாண்டார்.

தமிழ் உரைநடையின் திறம் வளரப் பணிசெய்தவராகவும் நாவலரைக் காணலாம். தனது உரை நடையில் எளிமையான சிறிய வசனங்களைக் கையாண்டார். புதிய தமிழுக்கு அவசியமான மாற்றங்களையும் புகுத்தினார். எடுத்துக்காட்டாக ஆங்கிலத்தில் பயன்படுத்தப்படும் குறியீடுகளைத் தமிழுக்கு அறிமுகம் செய்தார். வசன நடை கைவந்த வல்லாளர். தமிழ் உரைநடையின் தந்தை என்றெல்லாம் இன்றைய உலகு புகழும் அளவுக்கு அவரது பணி இருந்தது.

தமிழ் இலக்கண நூல்களை ஆக்கியும் (உ-ம்: இலக்கணச் சுருக்கம், இலக்கண வினாவிடை) சில இலக்கண நூல்களுக்கு உரையெழுதியும் (நன்னூல் காண்டிகையுரை), சில இலக்கண நூல்களை முதன்முதல் பதிப்பித்தும் (இலக்கணக் கொத்து மூலமும் உரையும்) தமிழ்த்தொண்டாற்றினார்.

அவரது ஆசிரியப் பணியும் விதந்து போற்றத்தக்கது. தான் கற்ற வெஸ்லியன் மிஷன் கல்லூரியில் (யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில்) 1841 இல் இருந்து சில காலங்களுக்கு மேல் வகுப்புக்களுக்கு தமிழாசிரியராகவும் கீழ் வகுப்புக்களுக்கு ஆங்கில ஆசிரியராகவும் பணி புரிந்தார். தவிர, மரபு முறையில் மாணவர்களுக்கு இலவசமாகத் தமிழ் போதித்தார்.

நாவலருடைய சமூகப் பணிகளும் சமூகம் போற்றத்தக்கவை. 1876–1877 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் யாழ். மண்ணில் கடும் வரட்சி நிலவிய போது அவர் ஆற்றிய கஞ்சித்தொட்டித் தருமத்தின் ஊடாகப் பலர் பசியாறினர். சேர். பொன் இராமநாதன் அரசியலில் ஈடுபடத் தனது முழு ஆதரவையும் வழங்கியிருந்த செய்தி நாவலரது அரசியல் ஈடுபாட்டைச் சுட்டி நிற்கின்றது.

நாவலர் ஐந்து முறை தமிழகத்திற்கு விஜயம் செய்திருக்கிறார். முதலாவது பயணம் பைபிளைத் தமிழில் மொழி பெயர்த்து அரங்கேற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்டதாகும். பைபிளைச் சுத்தமாக மொழிபெயர்த்ததன் ஊடாக உண்மைச் சமயி ஒருவனுக்குச் சமயக் காழ்ப்புக் கிடையாது என்பதையும் நிரூபித்தார். இரண்டாவது பயணம் அச்சியந்திரம் வாங்கவென அமைந்தது. இதன்போதே திருவாவடுதுறை ஆதீனத்தார் "நாவலர்" என்ற பட்டத்தை வழங்கினர்.

"நமக்கு இச்சரீரம் கிடைத்தது நாம் இறைவனை வணங்கி முத்தி இன்பம் பெறும் பொருட்டேயாம்" என்று தமது சைவ வினாவிடையில் குறிப்பிட்டுக் காட்டிய நாவலர், அதன்படி வாழ்ந்தும் காட்டினார். தாய் மொழியும் தாய்மதமும் தன்னிரு கண்களெனக் கொண்டார்.

மொழிப் பற்றும் சமயப் பற்றும் எம் அனைவருள்ளும் மேலெழுவது, எம் மண்ணின் எழுச்சிக்கும் மக்களின் வாழ்வுக்கும் வளங்கொழிப்பதாக அமையும். இன்று 134 ஆவது ஆண்டாக நாவலரை நினைவில் கொள்கின்றோம். இவ்வாறு எந்நாளும் அன்னவரை நினைத்து மொழி மீதும் சமயம் மீதும் பற்றுதலை வளர்ப்போம். நாம் நாமாக வாழ்வோம் என்ற உணர்வு உந்துகை பெற இத்தகைய நினைவுகூரல்கள் துணைசெய்யும்.

- ச.லலீசன் -
விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம்

நடாத்தும்

நாவலர் விழா

காலம்:
24.11.2013 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி

இடம்:
நாவலர் கலாசார மண்டபம், நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

தலைவர்
கலாநிதி ஆறு.திருமுருகன்
(உப தலைவர், யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம்)

நிகழ்ச்சி நிரல்

மங்கள விளக்கேற்றல்: திரு.திருமதி கனகசபை அருள்நேசன் தம்பதியர் (உரிமையாளர், சிவகணேசன் ரெக்ரைல்ஸ், யாழ்ப்பாணம்)
தமிழ்த் தெய்வ வணக்கம்: திருமதி விஜயதர்சினி தயாளன் (கோப்பாய் ஆசிரிய கலாசாலை)
வரவேற்புரை: திரு.ச.லலீசன் (பொருளாளர், யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம்)
தலைமையுரை:
தொடக்கவுரை: பேராசிரியர் தி.வேல்நம்பி (தலைவர், யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம்)
சிறப்புரை: நாவலரும் தமிழ்த்தேசியமும் வழங்குபவர் பண்டிதர் கலாநிதி செ.திருநாவுக்கரசு (ஓய்வுநிலை விரிவுரையாளர்)
நாவலர் இசையரங்கு: வழங்குபவர் கலாநிதி எஸ்.ஸ்ரீதர்ஷனன் (தலைவர், இசைத்துறை யாழ் பல்கலைக் கழகம்)
பட்டிமண்டபம் பொருள்: நாவலரின் கனவை நனவாக்குவதில் பெரும் பங்கு வகிப்பது அவரது

சமயப் பணிகள்
திரு.தி.செல்வமனோகரன்
(உதவி விரிவுரையாளர், இந்து நாகரீகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
திரு.சி.றமணன்
(விரிவுரையாளர், இந்து நாகரீகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

தமிழ்ப் பணிகள்
திரு.கு.பாலஷண்முகன்
(ஆசிரியர், சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம்)
திரு.இ.சர்வேஸ்வரா
(உதவிப் பதிவாளர், மருத்துவபீடம், யாழ்.பல்கலைக்கழகம்)

நடுவர்: பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏரு பம்

- ஷோபாசக்தி -



இவன் வீட்டின் வாசற்படியை அடைந்த போது வீட்டின் உள்ளே தொலைக்காட்சியில் மகிந்த ராஜபக்ச உரையாற்றிக் கொண்டிருந்தார். இவன் வாசற்படியின் ஓரமாக உட்கார்ந்து கொண்டு தலையைச் சாய்த்துத் தொலைக்காட்சியைப் பார்த்தான். "உங்களைக் கவுரவமாகவும் சுயமரியாதையுடனும் வாழ வைப்பது என்னுடைய பொறுப்பு. நான் இந்த நாட்டு மக்கள் அனைவரதும் தலைவன் " என ராஜபக்ச தமிழில் பேசிக் கொண்டிருந்தார். அந்த அகலமான தொலைக்காட்சித் திரை முழுவதையும் ராஜபக்சவின் முகம் நிறைத்திருந்தது. அவ்வளவு பெரிய தொலைக்காட்சியை இவன் இப்போதுதான் பார்க்கிறான். தட்டையாகவும் நவீனமாகவும் துல்லியமான ஒலியமைப்புடனும் அது இருந்தது. வீட்டுக்காரரின் மகன் அந்தத் தொலைக்காட்சிப் பெட்டியைச் சவூதியிலிருந்து அனுப்பி வைத்திருக்கலாம். இவன் முகத்தைத் திருப்பி வீதியைப் பார்த்தான். வீதியில் இருள் மண்டியிருந்தது.

இவன் சிறுவனாய் இருந்தபோது அம்மாவிடம் தொலைக்காட்சியொன்று வாங்கும்படி இடைவிடாமல் நச்சரித்திருக்கிறான். இறந்து போன அப்பாவின் சொற்ப பென்ஷன் பணம் மட்டுமே இவர்களிற்கு வருமானம். அந்தப் பணத்தில் தான் அம்மா இவனையும் இவனது அக்காவையும் பட்டினியில்லாமல் பள்ளிக்கூடம் அனுப்பிக்கொண்டிருந்தார். அப்போது இந்த வீட்டில் ஒரு சிறிய கறுப்பு வெள்ளைத் தொலைக்காட்சியிருந்தது. இவனும் அக்காவும் இரவு நேரத்தில் இங்கே தொலைக்காட்சி பார்க்க வருவார்கள். அக்காவிற்குத் தொலைக்காட்சி பார்ப்பதில் ஏனோ ஆர்வமில்லை. ஆனால் இருளில் தனியாக வருவதற்கு இவன் பயப்படுவான். அதனால் அக்காவைத் துணைக்கு அழைத்து வருவான். தரையில் அமர்ந்து இவன் கண்கொட்டாமல் தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருப்பான். சிறிது நேரமானதுமே அக்கா "வீட்ட போகலாமா" என முணுமுணுப்பாள். அது இவனது காதில் விழாது. அக்கா பொறுக்க முடியாமல் இரகசியமாக இவனது தொடையைக் கிள்ளும்போது, இன்னும் கொஞ்ச நேரம் என இவன் அக்காவிடம் மன்றாடுவான். வீட்டுக்காரர்கள் தேனீரும் அவித்த பனங்கிழங்கும் தருவார்கள். அக்கா வெட்கப்படுவாள். அவற்றை வாங்காவிட்டால் தொலைக்காட்சி பார்க்க அனுமதிக்க மாட்டார்களோ என்ற பதற்றத்திலேயே இவன் அவற்றை வாங்கிக்கொள்வான்.

இவன் வீட்டில் வெறும் தீப்பெட்டியின் மீது வெள்ளைத் தாளை ஒட்டி நடுவே கத்தரித்து பக்கவாட்டில் வர்ணம் தீட்டித் தொலைக்காட்சிப் பெட்டி செய்து விளையாடிக் கொண்டிருப்பான். பள்ளிக்கூடம் எடுத்துச் செல்லும் பையில் எப்போதும் சில தீப்பெட்டித் தொலைக்காட்சிகள் இருக்கும். கொஞ்சம் வளர்ந்ததும் தொலைக்காட்சி பார்ப்பதற்காக இவன் கிராமத்துக் கடைத் தெருவுக்குப் போகத் தொடங்கினான். அங்கேயிருந்த "மீனா கபே"யில் எப்போதும் வண்ணத் தொலைக்காட்சி ஓடிக்கொண்டிருக்கும். தொலைக்காட்சியில் நிகழ்ச்சிகளைப் பார்க்கும் போது இவன் வசியத்தில் விழுந்தவன் போலிருப்பான். அந்த நேரங்களில் இவனது கண்கள் ஒளிர்ந்துகொண்டேயிருக்கும். எந்த நிகழ்ச்சி யும் அவனுக்கு அலுப்பூட்டியதேயில்லை. அலைவரிசைக் குழப்பத்தால் அடிக்கடி தொலைக்காட்சியில் வெறும் புள்ளிகள் மட்டுமே தோன்றும். அந்தப் புள்ளிகளை ஆயிரக்கணக்கான மனிதர்கள் ஓடி வந்துகொண்டிருப்பது போல கற்பனை செய்து கொள்வான். தொலைக்காட்சியில் சிலசமயங்களில் படம் மட்டும் வரும். ஒலி வராது. படத்துக்கு ஏற்ற ஒலிகளை இவனாகவே கற்பனை செய்து ஆர்வமாகப் பார்த்துக்கொண்டிருப்பான். ஒலி மட்டும் வந்தாலும் படக்காட்சிகளை இவனால் கற்பனையில் உருவாக்கிக்கொள்ள முடியும். மின்சாரம் துண்டிக்கப்படும் போது வெறுமனே இவனால் தொலைக்காட்சியைக் கண்ணிமைக்கால் பல நிமிடங்கள் பார்த்துக் கொண்டிருக்கவும் முடியும். தொலைக்காட்சிப் பெட்டியொன்று தான் இவனுக்குத் தேவையானது. அதிலிருந்து படங்களையும் ஒலிகளையும் இவனால் உருவாக்கிக்கொள்ள முடியும். கடை மூடப்படும் போதுதான் இவன் வீட்டுக்குத் திரும்பி வருவான்.

பக்கத்து வீட்டிற்கு இவன் தொலைக்காட்சி பார்க்கப் போவது குறைந்திருந்தது. இரண்டு நகரங்களை இணைக்கும் நெடுஞ்சாலையின் ஓரத்தில் இவனின் கிராமம் அமைந்திருந்தது. அந்த நெடுஞ்சாலையை ஒட்டித்தான் கடைத்தெரு இருந்தது. அந்த நெடுங்சாலையால் இராணுவம் ரோந்து செல்லும் நாட்களில் கடைத் தெரு வெறிச்சோடிவிடும். இராணுவ வாகனங்கள் தூரத்தில் வரும் ஒலி கேட்டவுடனேயே கடைகள் சடுதியில் மூடப்படும். கடைத் தெரு மனிதர்கள் நெடுஞ்சாலையிலிருந்து விலகி ஓடிவிடுவார்கள். இராணுவம் கடை வீதியைக் கடந்து செல்லும் போது சில வேட்டுக்களைத் தீர்க்காமல் செல்வதில்லை. அது வெறுமனே எச்சரிக்கை வெடியாகத்தானிருக்கும். இராணும் ஒரு போதும் நெடுஞ்சாலையிலிருந்து விலகிக் கிராமத்திற்குள் நுழைந்ததில்லை.

கடைத்தெரு மூடிக் கிடக்கும் நாட்களில் இவன் பக்கத்து வீட்டிற்குத்தான் தொலைக்காட்சி பார்க்கப் போவான். அவர்கள் இப்போது ஒரு சிறிய வண்ணத் தொலைக்காட்சியை வாங்கியிருந்தார்கள். இவன் ஆள் கொஞ்சம் வளர்ந்துவிட்டதால் இப் போது இவனை நாற்காலியில் உட்காருமாறு அவர்கள் வற்புறுத்துவார்கள். நொறுக்குத் தீனிகளும் தேனீரும் கொடுப்பார்கள். அவற்றை வாங்கத்தான் இவன் கொஞ்சம் வெட்கப்படுவான். இவ்வளவுக்கும் இவனது தாயாரும் இந்த வீட்டுக்காரியும் நெருங்கிய சிநேகிதிகள் தான். அவசரத்துக்குச் சீனி, தேயிலை என இருபக்கமும் கைமாற்றும் நடப்பதுண்டு. ஆனால், இவனுக்குத்தான் யாரிடமும் எதுவும் வாங்கிக் கொள்ளவதென்றால் கூச்சமாயிருக்கும். தொலைக்காட்சி விசயத்தில் மட்டும் தான் இவன் கூச்சத்தையும் மீறி நடந்துகொண்டான்.

தீப்பெட்டித் தொலைக்காட்சி வைத்து விளையாடும் வயது கடந்து போன போது உண்மையாகவே இவனது வீட்டுக்கு ஒரு சிறிய வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வந்தது. அக்கா ஆசிரியப் பணியில் சேர்ந்து பெற்ற முதலாவது சம்பளப் பணத்துடன் கையிலிருந்த சேமிப்புப் பணத்தையும் போட்டு அம்மா இவனுக்கு அதை வாங்கிக் கொடுத்தார். இவன் அக்காவிடம் கேட்டு ஓர் அழகிய துணியுறையைத் தைக்கச் செய்து

அதனால் தொலைக்காட்சியைப் பத்திரம் செய்தான். பள்ளிக்கூடத்துப் பைக்குள் இப்போது தீப்பெட்டிகள் இல்லை. அதற்குப் பதிலாகத் தொலைக்காட்சியை இயக்க வழிகாட்டும் விபரக் கொத்தை இவன் பைக்குள் எப்போதும் வைத்திருந்தான்.

பள்ளிக்கூடத்தால் வந்ததும் தொலைக்காட்சியின் முன்னால் உட்கார்ந்துவிடுவான். ஆட அசைய மாட்டான். சிலை போல தொலைக்காட்சியைப் பார்த்தவாறே உட்கார்ந்திருப்பான். சாப்பிடுவதற்கு அம்மா பத்துத் தடவைகள் கூப்பிட்ட பின்பே குசினிக்குள் ஓடிச் சென்று தட்டை எடுத்துக்கொண்டு ஓடிவந்து தொலைக் காட்சிப் பெட்டிக்கு முன்னால் உட்கார்ந்து விடுவான். இதனால் ஒன்றும் அவனது படிப்புப் பாதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. வகுப்பில் எப்போதும் அவன் முன்னணி மாணவனாகவேயிருந்தான். அக்காவிடம் ஒரு நாள்தொலைக்காட்சியைச் சுட்டிக்காட்டி "எங்கிட வாத்தி மாரவிட இது பிரயோசனமானது" என்றான்.

பல்கலைக்கழக அனுமதி சொற்ப மதிப்பெண்களால் தவறிப் போனது. கொஞ்சம் மனம் சோர்ந்து போனான். பகல் முழுவதும் தீவிரமாகப் படித்தான். இரவானதும் அறையிலிருந்த விளக்கை அணைத்துவிட்டு இருளில் நடுநிசி வரை தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருப்பான். அம்மா அவ்வப்போது வந்து "இருட்டுக்குள்ளயிருந்து பார்க்காத தம்பி, கண் பழுதாப் போகும்" என்பார். அது இவனின் காதில் ஏறாது.

இவனுக்கு இருபது வயதானபோது அந்தக் கிராமத்திற்குள் இராணுவம் முதற்தடவையாக நுழைந்தது. இராணுவம் வரும் செய்தி கேட்டுச் சனங்கள் வீடுகளிலிருந்து கையில் அகப்பட்டவற்றை எடுத்துக்கொண்டு உயிர் தப்பச் சிதறி யோடினார்கள். அக்கா அப்போது நகரத்தில் அறை வாடகைக்கு எடுத்துத் தங்கியிருந்து நகரத்துப் பாடசாலையில் வேலை செய்ததால் இவனும் அம்மாவும் நகரத்திற்குப் போவதென்று முடிவெடுத்தார்கள். இவர்களது உடமைகள் இரு பெட்டிகளிற்குள் அடங்கிவிட்டன. சைக்கிளின் பின்னால் தொலைக் காட்சியை வைத்துக் கட்டிக் கொண்டான் நெடுஞ்சாலை ஓரத்தில் நின்று நகரத்திற்குச் செல்லும் வாகனமொன்றில் அம்மாவையும் பெட்டிகளையும் ஏற்றி விட்டு இவன் வாகனத்தைச் சைக்கிளில் பின் தொடர்ந்தான்.

நகரத்திற்கு வந்ததும் கிடைத்த விலைக்கு தொலைக்காட்சியை விற்றான். மிகச் சொற்பமான பணமே கிடைத்தது. நகரத்திலிருந்த உறவினரின் கடையொன்றிற்குச் சென்று அங்கே சைக்கிளை நிறுத்திவிட்டு, சற்று நேரத்தில் வருவதாகக் கூறிவிட்டு நடந்து பஸ் நிலையம் வந்து பஸ்ஸில் ஏறி உட்கார்ந்தான். நான்கு மணிநேரப் பயணத்தில் இருபது சோதனைச் சாவடிகளைக் கடக்க வேண்டியிருந்தது. நெடுஞ்சாலையின் ஓரத்தில் இறங்கியவன் அங்கிருந்து வயல்வெளிகளுக்குள்ளால் காட்டை நோக்கி நடந்தான். இடையிடையே எதிர்ப்பட்டவர்களிடம் வழியை விசாரித்துக் கொண்டான். இரவாகிக்கொண்டிருந்தாலும் காட்டின்மீது நிலவு வெளிச்சம் போட்டது. இரவு முழுவதும் காட்டுப் பாதையால் நடந்து ஒரு கிராமத்தை அடைந்தான். அங்கே விடுதலைப் புலிகளின் பயிற்சி முகாம் இருந்தது.

இவன் காட்டிற்குள்ளால் நடந்துவந்து இயக்கத்தில் சேர்ந்த தாலோ என்னவோ இவனுக்குக் கானகன் என்று இயக்கத்தில் பெயர் வைத்தார்கள். ஆனால், தோழர்கள் இவனை "யங்கிள்" என்றே அழைத்தார்கள். தாக்குதலின் முன்னணி அணியில் யங்கிள் நின்றால் அந்தத் தாக்குதல் வெற்றிதான் என்று இயக்கத்திற்குள் கதை இருந்தது. போரிடவே பிறந்தவன் போல அவன் இருந்தான். அவனது இடது கண்ணிற்கு திட்டமிடல் என்றும் வலது கண்ணிற்கு துணிச்சலென்றும் பெயர். அவனது இடது காலிற்கு நிதானம் என்றும் வலது காலிற்கு வேகமென்றும் பெயர். எத்தனையோ முற்றுகைகளை முன்னணியில் நின்று முறியடித்திருக்கிறான். அவனது அணி முழுவதுமாகச் சிதைக்கப்பட்ட நிலையிலும் தனியாளாகப் போராடித் தளம் திரும்பியிருக்கிறான். கடைசியில் விமானக் குண்டு வீச்சொன்றில் வேகமெனப் பெயரிடப்பட்ட கால் துண்டிக்கப்பட்டது. நிதானம் எனப் பெயரிடப்பட்ட கால் எஞ்சியிருந்தது.

ஊன்றுகோலின் உதவியுடன் அவன் முகாமில் நிதானமாக நடந்து திரிந்தான். அம்மாவிற்கோ அக்காவிற்கோ தான் காலிழந்த செய்தி தெரியாமல் பார்த்துக் கொண்டான். யுத்த நிறுத்தம் வந்த போது கூட இவன் அம்மாவைப் பார்க்கப் போகவில்லை. இவன் இருக்குமிடமும் அம்மாவிற்குத் தெரியாமல் விட்டுத் திரும்பிச் சென்றார்கள்.

பார்த்துக்கொண்டான். ஒரு வருடத்திற்குப் பின்பு புலிகளின் தொலைக்காட்சியில் தான் அம்மா இவனைப் பார்த்தார். அடுத்த வாரமே அம்மாவும் அக்காவும் இவனைத் தேடி வந்தார்கள். இவன் பயந்தது போல எதுவும் நடக்கவில்லை. அம்மா இவனது கால் துண்டிக்கப்பட்ட பகுதியை மட்டும் தடவிக்கொடுத்தார். உற்சாகமாகப் பேசிவிட்டுத் திரும்பிச் சென்றார்கள்.

புலிகளின் தொலைக்காட்சியில் இவன் மூன்று நிகழ்ச்சி [illegible] கீதங்கள்" என்ற அரை மணிநேர நிகழ்ச்சி மிகவும் பிரபலமானது. சாந்தன், தேனிசை செல்லப்பா, சுகுமார், சிட்டு போன்றோரின் புகழ் பெற்ற பாடல்களை இவன் தொலைக்காட்சியில் தொகுத்து வழங்குவான். பாடல்களிற்கு முன்பு இவன் சொல்லும் கவிதை வரிகளும் இவனது உணர்ச்சி துள்ளும் ஏற்ற இறக்கமான கம்பீரமான குரலும் மக்களைச் சொக்கச் செய்தன. சாந்தன் ஒருமுறை இவனிடம் "என்னைவிட உங்களுக்குத்தான் கனக்க ரசிகர்கள்" எனச் சொல்லிச் சிரித்தார்.

வழிதெருவில் இவனை மக்கள் காணும் போது இவனைச் சூழ்ந்து கொண்டார்கள். இவன் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் தோன்றும் போது உட்கார்ந்துகொண்டிருப்பதால் இவனிற்கு ஒரு கால் இல்லை என்பது பலருக்குத் தெரியாது. அந்தக் கம்பீரக் குரல் ஊன்றுகோலோடு தடுமாறி நடந்து வருவதை அவர்கள் நேரில் பார்த்தபோது அவர்களது கண்கள் இருண்டு போயின. சில தாய்மார்கள் இவனை அணைத்து உச்சி மோர்ந்தார்கள். இழந்து போன குழந்தைகள் அவர்களிற்கு ஞாபகம் வந்திருக்கலாம்.

இவனுக்கு ஏராளமான நேயர் கடிதங்கள் வந்தன. அவற்றில் காதல் கடிதங்களும் இருந்தன. அந்தக் கடிதங்களை இவன் தனிமையில் புன்னகையோடு படித்துவிட்டுக் கிழித்துப் போடுவான். " இயக்கத்துக்கே காதல் கடிதம் எழுத எங்கிட பெட்டையள் துணிஞ்சிற்றாளவ" என அவனது உதடுகள் முணுமுணுக்கும்.

சமாதான காலத்தில் வன்னியிலிருந்து இசைக்குழுவொன்று ஐரொப்பாவிற்கு புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் இசை நிகழ்ச்சிகள் நடத்தச் சென்றபோது நிகழ்ச்சித்தொகுப்பாளராக இவனும் அவர்களுடன் சென்றான். இவன் தான் அவசியம் வர வேண்டுமென நிகழ்ச்சி அமைப்பாளர்கள் கேட்டிருந்தனர். விமானத்தில் மது வழங்கப்பட்ட போது இவனுக்கு அருகிலிருந்த பாடகன் " கன நாளாப் போச்சுது, ஒண்டு எடுக்கவா" என இவனிடம் பகிடி மாதிரிக் கேட்டான். இவன் முறைத்த முறைப்பில், பாடகன் "குடிக்கிறதில ஒண்டுமில்ல ஆனால் குரலுக்குக் கூடாதெல்லோ" என முனகிவிட்டு இருக்கையில் சாய்ந்துகொண்டான்.

ஐரோப்பிய நகரங்களில் பெருந்தீனியால் இவனுக்கு வயிற்று வலியே வந்துவிட்டது. தங்களது வீட்டிற்குச் சாப்பிட வர வேண்டும் என மக்கள் அடிக்காத குறையாக இவனைத் தங்களது வீட்டிற்கு முறை வைத்துக் கடத்திச் சென்றார்கள். நிகழ்ச்சிகளின் போது இவன் மேடைகளில் தோன்றும் போதெல்லாம் இளைஞர்கள் ஆரவாரித்துக் கூக்குரலிட்டார்கள். அங்கிருந்து திரும்பும் போது விலையுயர்ந்த பரிசுப் பொருட்களால் இவனது பெட்டி நிரம்பி வழிந்தது. கொழும்பு விமான நிலையத்தில் சோதனையின் போது பரிசுப் பொருட்களில் ஒன்றைக் கையிலெடுத்து "இதை எனக்குத் தருவாயா" என அதிகாரி கேட்ட போது, அதை அதிகாரியே எடுத்துக் கொள்ளுமாறு புன்னகையுடன் கைகாட்டினான்.

முகாமுக்குத் திரும்பியவுடனேயே எல்லாப் பரிசுப் பொருட்களையும் தோழர்களிற்குப் பகிர்ந்து கொடுத்தான். அவனுக்கென்று எஞ்சியவை காதலைத் தெரிவிக்கும் மூன்று வாழ்த்து அட்டைகள் மட்டுமே. பாரிஸ் நகரத்தில் இரண்டு அட்டைகளும் சுவிஸில் ஓர் அட்டையும் கிடைத்திருந்தன. பாரிஸ் அட்டைகள் இரண்டும் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தன. சுவிஸ் அட்டையில் மழலைத் தமிழில் ஒரு மட்டமான காதல் கவிதை எழுதப்பட்டிருந்தது. அவற்றில் எழுதப்பட்டிருந்தவற்றுக்காக அல்லாமல் அந்த அட்டைகளின் அழகிற்காக அவற்றைக் கிழித்துப் போட மனமற்றவனாய் எடுத்து வந்திருந்தான். முகாமில் வைத்து அவற்றையும் கிழித்துப் போட்டான். முகாமிலிருந்த தோழர்களிற்கு விடிய விடிய ஐரோப்பியப் பயணக் கதைகளைச் சொன்னான். புலம் பெயர்ந்த தமிழர்கள் இருக்கும் வரை போராட்டத்தை எவராலும் அழித்துவிட முடியாது என நம்பினான்.

நந்திக் கடலின் ஓரத்தில் இவனது அணி சரணடையும் நிலையிலில்லை. அதை மடியில் செருகிக் கொண்டு நந்திக் கடலோரமாக நடந்து வந்தான். கடல் நீரேரியைக் கடந்து இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் செல்ல ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாக ஒரு படகில் இருபது பேர் வரை தயாராக இருந்தார்கள். இராணுவத்திடமிருந்து வரும் ஷெல் வீச்சுகள் குறையும் போது படகு புறப்படுவதாகத் திட்டம். இவன் செயற்கைக் காலைக் கழற்றிக் கரையிலேயே வைத்து விட்டு ஊன்றுகோலுடன் அந்தப் படகில் ஏறிக்கொண்டான். ஷெல் வீச்சு நின்றிருந்த ஒரு தருணத்தில் படகு புறப்பட்டது. இவன் சயனைட் குப்பியைக் கடல் நீரில் எறிந்தான்.

முடிவை எடுத்த போது இவன் அந்த இடத்திலேயே சயனைட் குடித்துவிடலாம் என்றான். சாவதால் ஆகப்போவது எதுவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மில்லை எனப் பொறுப்பாளர் சொன்னார். துப்பாக்கிகள், சீருடைகள், இலக்கத் தகடுகள், சயனைட் குப்பிகள் எல்லாம் மணலில் புதைக்கப்பட்டதும் அணி சிதறி மக்களுக்குள் கரைந்து போனது. இவனுக்கு சயனைட் குப்பியைப் புதைக்க விருப்பமில்லை. அதை மடியில் செருகிக் கொண்டு நந்திக் கடலோரமாக நடந்து வந்தான். கடல் நீரேரியைக் கடந்து இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் செல்ல ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாக ஒரு படகில் இருபது பேர் வரை தயாராக இருந்தார்கள். இராணுவத்திடமிருந்து வரும் ஷெல் வீச்சுகள் குறையும் போது படகு புறப்படுவதாகத் திட்டம். இவன் செயற்கைக் காலைக் கழற்றிக் கரையிலேயே வைத்து விட்டு ஊன்றுகோலுடன் அந்தப் படகில் ஏறிக் கொண்டான். ஷெல் வீச்சு நின்றிருந்த ஒரு தருணத்தில் படகு புறப்பட்டது. இவன் சயனைட் குப்பியைக் கடல் நீரில் எறிந்தான்.

படகு கரையை அடையும் போதுதான் கரையிலேயே வரிசையாக இராணுவீரர்கள் படகை எதிர் நோக்கித் துப்பாக்கிகளைக் குறிவைத்துக் கரையோடு கரையாகப் படுத்துக் கிடந்தது தெரிந்தது. இவர்கள் படகை விட்டு இறங்கியதும் "ஆடைகளைக் களைந்து விட்டு வாருங்கள்!" என்ற உத்தரவு வந்தது. இவர்கள் " ஐயா நாங்கள் பொது மக்கள்" எனக் கூக்குரலிட்டார்கள். ஆடைகளைக் களையுமாறு மறுபடியும் உத்தரவு வந்தது. இவர்கள் தயங்கி நின்றபோது கரையிலிருந்து சரமாரியாக வெடிகள் கிளம்பின. கடல்நீர் துடித்துச் சிதறியது. ஆண்கள், பெண்கள், குழந்தைகள் எல்லோருமே ஆடைகள் முற்றாகக் களையப்பட்டு அவர்களது உடல்களிலே வெடிப்பொருட்கள் கட்டப் பட்டிருக்கின்றனவா எனப் பரிசோதிக்கப்பட்டனர். அந்த மனிதர் களை முழு நிர்வாணமாகவே ஒரு கிலோமீற்றர் நடத்திச் சென்ற இராணுவம் அங்கிருந்த பஸ்ஸில் ஏற்றியதன் பின்பாகத்தான் அவர்களை ஆடைகள் அணிந்துகொள்ள அனுமதித்தது. இவன் தலையைக் குனிந்தவாறேயிருந்தான். எவரையும் ஏறிட்டுப் பார்க்க இவன் விரும்பவில்லை. மணிக்கணக்காக பஸ் ஓடிக் கொண்டிருந்தது. குழந்தைகள் தாகத்தாலும் பசியாலும் வெப்பத் தாலும் அழுத போது அவர்களது தாய்மார்களால் "பளாரென" அறையப்பட்டு அடக்கப் பட்டன. வவுனியா தடுப்பு முகாமில் பஸ் நின்றபோது இவன் தலையைக் கவிழ்ந்தவாறே இறங்கினான். பூமியைத் தவிர இவனது கண்கள் எதையும் பார்க்கவில்லை. வரிசையில் உட்கார்ந்திருந்த போது இவனது தோளைத் தொட்டு ஒரு இரகசியக் குரல் "கானகன்" என அழைத்தது. சடுதியில் இவன் தலை நிமிர்த்திப் பார்த்தபோது ஓர் இராணுவ அதிகாரி இவனைப் பார்த்து இளித்துக் கொண்டு நின்றான். தரையில் கிடந்த ஊன்றுகோலைக் கையில் எடுத்தவாறே மறுகையால் இவன் எழுந்திருக்க அதிகாரி உதவினான். இவன் எழுந்ததும் ஊன்றுகோலைக் கொடுத்து விட்டு இவனது தோள் பற்றி அதிகாரி அழைத்துச் சென்றான்.

தகரங்களால் அடைக்கப்பட்டிருந்த அந்தச் சிறிய அறைக்குள் தான் விசாரணை தொடங்கியது. இவனது உண்மையான பெயரைக் கேட்ட போது ரவிக்குமார் என்றான். இயக்கப் பெயர் கானகன் என்றான். "உனக்கு யங்கிள் என்று இன்னொரு பெயரும் இருக்கிறதே" எனச் சொல்லி அதிகாரி சிரித்தான். எந்த உண்மையை மறைத்தும் பலனில்லை என்பது இவனுக்குத் தெரிந்தது. ஆனால், முடிந்தவரை உண்மைகளைப் பேசி விடாமலிருப்பது தனது கடமை என்று இவன் நினைத்தான். ஆனால், விசாரணையின் போக்கில் மறைப்பதற்கு எந்தத் தகவல்களும் இவனிடம் இல்லாமற் போயின. விசாரணை ஒரு பேரேட்டில் பதிவாகிக் கொண்டிருந்தது. சுற்றி நின்ற இராணுவத்தினரில் சிலர் இவனை செல்போன் வீடியோவில் பதிவு செய்தவாறிருந்தார்கள். இவன் தலையைக் குனிந்தபோதெல்லாம் ஒரு சிங்கள வசைச் சொல்லுடன் இவனது தலை அவர்களால் தூக்கி நிறுத்தப்பட்டது. 'கானகன் தான் சங்கடப்படுகிறாரே, படம் பிடிப்பதை நிறுத்துங்கள்" என அதிகாரி புன்னகையுடன் உத்தரவிட்டதும் படம் பிடிப்பது நிறுத்தப்பட்டது. இவன் எதிர்பார்த்த மாதிரியே பிறகு சம்பவங்கள் நிகழ்ந்தன.

தரையோடு தரையாக நகர முடியாது கிடக்கும் ஒரு மூயலை அடிப்பதுபோல சுற்றிநின்று தடிகளாலும் துப்பாக்கியின் பின்புறங்களாலும் இவனை அடித்துக்கொண்டேயிருந்தார்கள். அவர்களது கேள்விகளிற்கு இவனுக்கு உண்மையிலேயே பதில் தெரியாது. இவனை உட்கார வைத்து விட்டு அசையவிடாமல் பிடித்துக் கொண்டே இவனது துண்டிக்கப்பட்ட காலின் தொடைப் பகுதியிலிருந்து மிக நிதானமாகவும் திருத்தமாகவும் ஒரு துண்டுத் தசையைக் "கேக்" போல கத்தியால் வெட்டி எடுத்து இவனது கையில் கொடுத்து அதைச் சாப்பிடச் சொன்னார்கள். இவன் மயங்குவது போல பாவனை செய்து கண்களைச் சுழற்றிக் கீழே சரிந்தான். இவனின் வாய்க்குள் அந்தச் சதைத்துண்டு இரத்தம் வடிய அப்படியே திணிக்கப்பட்டது. அது தொண்டைக்குள் வழுக்கிக் கொண்டு போனது.

அடுத்த மூன்று நாட்களும் இவன் வாந்தி எடுத்தபடியே இருந்தான். உடலிலிருந்த இரத்தம் வாந்தியாக வெளியேறிக் கொண்டிருந்தது. இவன் புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பப்பட்ட பின்பும் அடிக்கடி வாந்தி எடுத்தவாறேயிருந்தான். சாப்பிடும் போது இறைச்சியையோ மீனையோ பார்த்தால் ஓங்காளித்து வாந்தி எடுப்பான். மாமிசம் சாப்பிடுவதை நிறுத்திக்கொண்டான். இந்தப் புனர்வாழ்வு முகாமில் பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட இருநூறு சரணடைந்த போராளிகள் தங்கவைக்கப்பட்டிருந்தனர். நோயால் இறந்த ஆறுபேருக்கும், தற்கொலை செய்துகொண்ட இருவருக்கும் பதிலாக புதியவர்கள் முகாமில் சேர்க்கப்பட்டார்கள். இருநூறு என்ற எண்ணிக்கை குறையாமல் இராணுவத்தினர் பார்த்துக் கொண்டார்கள்.

இவன் எப்போதும் மனச் சோர்வுடனேயே காணப்பட்டான். முகாமில் இருவருக்கு மனநிலை முற்றாகச் சரிந்திருந்தது. அவர்களில் ஒருவன் தனது ஆடைகளைக் கழற்றி வீசுவதிலேயே குறியாயிருந்தான். அதற்காக இராணுவத்தினரிடம் ஒவ்வொரு நாளும் உதைபட்டான். அவன் அங்கிருந்து விடுதலையாவதற்காக நாடகம் போடுகிறான் என இராணுவ அதிகாரி சொன்னான்.

இவர்களில் தெரிவு செய்யப்பட்ட ஐம்பது பேர்களிற்கு பைஇத்துடன் முடித்துக் கொள்ளலாம் என்று மருத்துவர் சொன்னார்.

பயிற்சியளிக்க ஒரு மனநல மருத்துவர் வந்தார். அவர் மனச் சோர்விலிருந்து விடுபட்டு மகிழ்ச்சியாக இருப்பது எவ்வாறு என உரையாற்றிக் கொண்டிருக்கும் போதே இவன் குறுக்கிட்டு "இங்கிருந்து விடுதலையாகி வீட்டுக்குப் போனால் மகிழ்ச்சியாயிருப்போம் என நினைக்கிறேன்"" என்றான். மருத்துவர் எது சொன்னாலும் இவன் விட்டேற்றியாக அவரைத் தட்டிக் கழித்தான். கடைசியில் மருத்துவர் மனச் சோர்வுக்கு ஆளாகிவிட்டார் போலிருந்தது. அடுத்த பயிற்சி வகுப்பை இராணு வத்தினருக்கு எடுக்கவிருப்பதால் முன்னாள் போராளிகளிற்கான முதல்நாள் பயிற்சி வகுப்பை இத்துடன் முடித்துக் கொள்ளலாம் என்று மருத்துவர் சொன்னார்.

சரியாக ஒன்றரை வருடங்கள் கழித்து அங்கிருந்து விடுதலையான முதலாவது அணியில் இவனுமிருந்தான். அந்த அணியில் அவயங்களை இழந்திருந்தவர்கள் மட்டுமேயிருந்தனர். புதிய வேட்டியும் சட்டையும் இராணுவத்தினரால் வழங்கப்பட்டன. முகாமில் விழா நடத்திப் பத்திரிகையாளர்கள் முன்னிலையில் முன்னாள் போராளிகள் அவர்களது பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். இவனை அழைத்துச் செல்ல அம்மா வந்திருந்தார். அம்மாவின் முகம் முழுவதும் சிரிப்புத் தொற்றியிருந்தது.

அக்காவுக்கு கல்யாணமாகி அவள் நகரத்தில் குடியிருந்தாள். இவ்வளவு நாட்களும் அம்மா அக்காவுடனேயே தங்கியிருந்தார். அம்மா தன்னை அக்காவின் வீட்டுக்குத்தான் அழைத்துச் செல்வதாக இவன் எண்ணினான். ஆனால் அம்மா இவனைக் கிராமத்து வீட்டிற்கு அழைத்து வந்தார்.

வீடு உருக்குலைந்திருந்தது. கதவுகளையும் நிலைகளையும் கூடத் திருடிச் சென்றிருந்தார்கள். வாசலுக்கும் ஜன்னல்களிற்கும் அம்மா துணியால் திரை செய்து போட்டார். இவனது அறைக்குள் ஒரு மேசையும் நாற்காலியும் படுக்கையும் வாங்கிப் போட்டார். இவன் அந்த அறைக்குள்ளேயே அடைந்து கிடந்தான். வீட்டுக்குப் போனால் மகிழ்ச்சி உருவாகும் என மனநல மருத்துவரிடம் சொன்னதை அடிக்கடி நினைத்துப் பார்த்தான்.

கடைத் தெருவே மாறியிருந்தது. முன்பு இவன் தொலைக்காட்சி பார்க்கச் செல்லும் "மீனா கபே" இப்போது "லங்கா கபே" ஆகியிருந்தது. அதை இராணுவத்தினர் நடத்திக் கொண்டிருந்தனர். இப்போதும் அங்கே இடையறாது தொலைக்காட்சி ஓடிக் கொண்டிருந்தது. இவன் தலையைக் கவிழ்ந்தவாறே அதைக் கடந்து சென்றான். கடைத் தெருவில் எல்லோருமே தன்னைப் போலவே தலையைக் குனிந்தவாறே நடந்துகொண்டிருப்பதாக இவனுக்குத் தோன்றியது. தற்செயலாகச் சந்தித்த கண்களில் அச்சத்தை மட்டுமே இவன் பார்த்தான்.

அம்மா இவனுக்குச் செயற்கைக் கால் பொருத்துவதற்காகப் பணம் திரட்டிக் கொண்டிருந்தார். காலைப் பொருத்தி நான் எங்கே போகப் போகிறேன், அந்தப் பணத்தில் ஒரு தொலைக்காட்சி வாங்கினாலாவது அறைக்குள்ளிருந்து பார்த்துக்கொண்டிருக்கலாமென நினைத்தான். ஆனால், அவ்வாறு கேட்பது அம்மாவைப் புண்படுத்தக் கூடுமென்பதால் இவன் வெறுமனே அறைக்குள் அடைந்து கிடந்தான். வாரம் ஒருமுறை இராணுவச் சாவடிக்குச் சென்று கையெழுத்திட வேண்டியிருந்தது. அந்த நாட்களில் மட்டுமே வெளியே போனான்.

அன்று மாலையில் பக்கத்து வீட்டிலிருந்து பாட்டுச் சத்தம் வந்து கொண்டிருந்தது. மகிழ்ச்சி என்பது நாம் உருவாக்கிக் கொள்வதே என மனநல மருத்துவர் சொன்னது ஞாபகத்திற்கு வந்தது. கண்களை மூடிக்கொண்டு படுத்திருந்தான். பொழுது பட்டதும் ஊன்று கோலை எடுத்துக்கொண்டு வெளியே நடந்தான். அவன் பக்கத்து வீட்டு வாசற்படியில் தட்டுத் தடுமாறி ஏறிய போது உள்ளேயிருந்த தொலைக்காட்சியில் மகிந்த ராஜபக்ச உரையாற்றிக் கொண்டிருந்தார். சற்று நேரத்தில் தொலைக்காட்சி திடீரென நிறுத்தப்பட்டது.

வீட்டுக்காரர் வாசலுக்கு வந்து இவனைப் பார்த்தார். இவன் தொலைக்காட்சி பார்ப்பதற்காக வந்ததாகச் சொன்னான். வீட்டுக்காரர் தலையைக் குனிந்து நிலத்தைப் பார்த்தவறே அவர்கள் சாப்பிடப் போவதாகச் சொல்லி விட்டு வாசலிலேயே நின்றார். இவன் கையை வாசற்படியில் ஊன்றித் தட்டுத் தடுமாறி எழுந்து சுவரில் சாய்த்து வைத்திருந்த ஊன்றுகோலையும் எடுத்துக் கொண்டு படியிறங்கும் போது வீட்டுக்காரர் "கானகன் நீ இஞ்ச வந்து போனால் ஆமியால எங்களுக்கும் பிரச்சினை வரும்" என்று முணு முணத்தது இவனுக்குத் தெளிவாகக் கேட்டது.

வீதியில் நின்று சட்டைப் பையிலிருந்து பீடியை எடுத்துப் பற்ற வைக்க முயன்றான். கை நடுங்கிக் கொண்டிருந்தது. நான்காவது தீக்குச்சியிலேயே பற்ற வைக்க முடிந்தது. இந்தப் பழக்கம் தடுப்பு முகாமிலிருந்தபோது வந்திருந்தது. அம்மா காலையில் ஒரு கட்டு பீடி வாங்கிக் கொடுப்பார்.

வாயில் பீடியை வைத்தவாறே நடந்தான். இவனது ரவி என்ற பெயரை வீட்டுக்காரர் மறந்து இவனைக் கானகன் என அவர் அழைத்தது இவனுக்கு ஆச்சரியமாயிருந்தது. பீடியை இழுத்துக் கொண்டே நடந்தான். விடுதலையாகி வந்து இவ்வளவு நாளாகியும் அக்காவோ அத்தானோ தன்னை இதுவரை வந்து பார்க்காதது திடீரென இவனுக்கு உறைத்தது.

நடுநிசியில் அம்மா எழுந்து கை விளக்கையும் எடுத்துக் கொண்டு மெதுவாக நடந்து இவனது அறையை நோக்கிப் போனார். ஒவ்வொரு நாளும் அம்மா இவ்வாறு சென்று பார்ப்பார். இவன் தூங்கிக்கொண்டிருப்பது அவருக்கு நிம்மதியாகயிருக்கும்.

அம்மா இவனது அறையின் வாசலில் நின்று இவனது படுக்கையிருந்த திசையில் விளக்கைப் பிடித்தபோது படுக்கை காலியாயிருந்தது. அம்மா பதற்றத்துடன் அறையின் மூலையொன்றிற்கு வெளிச்சத்தைத் திருப்பினார். அங்கே அவன் சுவரோடு சாய்ந்து தரையில் ஆடாமல் அசையாமல் சிலைபோல உட்கார்ந்திருந்தான். அம்மா அவனது முகத்திற்கு வெளிச்சத்தைத் திருப்பியபோது அவனது கண்கள் மேசையையே உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்தார். அம்மா மேசைக்கு வெளிச்சத்தைத் திருப்பிய போது மேசையில் ஒரு தீப்பெட்டி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அம்மா திடீரென வெடித்துப் பெருங்குரலெடுத்து அழத் தொடங்கினார். இவன் அசையாமல் அதையுமாறாமல் உட்கார்ந்திருந்தான். இவனது கண்கள் ஒளிர்ந்துகொண்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியேறிகளின் கதை 04

வெள்ளரசங் கிளைகள்
வீரியமாய் வளர்கின்றன.
வேம்புகள் சாய்ந்து போனதில்
வெள்ளரசுகள் தானே
தலைநிமிர்த்துகின்றன.

வளநாடென்பதில்
எள்ளளவும் ஐயமில்லை.
நட்டகுழி மண் இட்டு
முடியுமுன்னேயே
வீரியக் கிளைகள் வான்விரியும்
அதிசய மண்.

வாழவைத்த மண்
பாழடைந்தே கிடந்தாலும்
விழுந்த மரம் பணம் காய்க்கிறது.
பழமிரும்பு பை நிறைக்கிறது.
ஓட்டையுடைசல்கூட
வாழும் வழி தருகிறது.

வலிப்புக்குக் கொடுக்க
ஒரு துண்டு
இரும்பை எங்காகிலும்
ஒளித்து வை-
ஏன மூத்தவர் சொன்னது
பகிடிக்கதைக்கல்ல.

இரும்புக்கு வந்தவன்
குந்தியெழ ஒரு இடம்
தேவைதானே!
வேள்ளரசு நிழல்
அவர்களுக்கு ஆறுதலாயிருக்கும்.

எலும்புகள்
சாம்பல்
வளமண்ணினை மேலும்
வளமிட்டிருக்கும் தானே!
நல்ல வீரியக் குருத்தெறிகின்றன
வெள்ளரசுகள்.

காவலுக்கிருப்பிகளுக்கு
காவலாயிருக்குமென
நம்பப்படுகிறது.
இனி-
வெள்ளரசுக் காவலுக்காய்
குடியானவர்களும் தேவைப்படுவர்தானே.!
சேட்டமாய் வளர்கின்றன
வெள்ளரசுகள்.

சில மாரிகளுக்குப்
பழகியாகிவிட்டது வாழ்வு.
இனிவரும் மாரிகளையும்
முடிக்கவேண்டியதுதான்.
உதவிவண்டிகள்
ஓடியோடி புழதித் தெருக்கள்
புழுங்குகின்றன.
இனிமாரிகளில்
சகதியிலும் அழுந்தட்டும்.

நிவாரண வரிசைகளில்
நீளக் காத்திருக்கும் வலுவை
கால்கள் பெறட்டும்.
கண்மூடியமர்ந்த
வெள்ளரசுச் சாமி
இதற்காகவேனும் ஒருமுறை
விழிதிறந்து
கால்களில் வீரியமேற்றட்டும்.

- கை.சரவணன் -

"இலங்கை தேசம்" தமிழர்களுடையதல்ல(வோ!)

அண்மையில் நடந்து முடிந்த கொமன்வெல்த் மாநாடுதான் இவ்வாறான பத்தியை எழுதத் தூண்டியது. தலைநகரில் நேரடியாகவும், தொலைக்காட்சி வாயிலாகவும் நிகழ்வுகளையும், நிகழ்வுக்கான பரப்புரைகளையும் காண நேரிட்டபொழுது, "தமிழ்மொழி எங்கே" என்று ஒருவித ஆதங்கத்துடன் கேட்கநேரிட்டது.

"இலங்கை தேசம்" யாருடையது அல்லது யாருடையதாக இருக்க வேண்டும் என்பதுதான் இந்த நாடிலுள்ள அரசியல் பிரச்சினையின் மைய விவாதமாகக் காணப்படுகின்றது. இலங்கையின் அரசியலமைப்புக்கள் உருவாக்கப்பட்ட பொழுதுகளில் எல்லாம், சிங்கள அரசியல் தலைவர்கள் தங்களின் பெரும்பான்மை அதிகாரத்தையும், செல்வாக்கையும் கொண்டு சிங்கள பௌத்த தேசமாக இலங்கையை வடிவமைத்துக் கொண்டார்கள்.

ஒரு தேசத்தின் அடையாளத்தை கொடுப்பது அந்த தேசத்திற்குரிய மொழியே. தமிழர்கள் தமிழ்மொழிக்குரிய சம அந்தஸ்து எல்லாவிடத்திலும் மிகச்சரியாக வழங்கப்பட வேண்டும் என்று வற்புறுத்துவதற்கும், போரிடுவதற்கும் காரணமும் இதுவே.

இலங்கை தேசம் பல்லினங்களின் ஒன்றுபட்டதொரு தேசமாக இருக்க வேண்டுமாயின் இங்குள்ள அனைத்து மக்களையும், அவர்களையும் மொழிகளையும் இலங்கைதேசம் பிரதிபலிக்க வேண்டும். இங்குள்ள இனங்களின் மொழிகள் இரண்டே சிங்களம், தமிழ். இலங்கை தேசம் கூட்டுருவாக்கம் செய்யப்பட்ட பல்லின தேசமாக அமைந்திருப்பின் அமையப்பெற்றிருப்பின் இரண்டு மொழிகளுக்கும் சம அந்தஸ்து பாரபட்சமின்றி வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். துரதிஸ்டவசமாக அவ்வாறான அங்கீகாரம் தமிழ்மொழிக்கு இலங்கை தேசத்தில் கிடைக்கவில்லை என்பதுதான் உண்மைதான். அதனால்தான் என்னவோ தமிழ் மொழி தனியொரு தேசத்திற்கான அங்கீகாரத்தைக் கோரிக் கொண்டே இருக்கின்றது. நிற்க.

இலங்யில் தற்போதுள்ள அரசியல் அமைப்பினை நீங்கள் எடுத்து நோக்கினால் பௌத்த மதம் அரச மதமாகவும், அதனைப் பாதுகாக்க அரசு தன்னாலான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும், சிங்கள மொழி தேசிய மொழியாக இருத்தல் வேண்டும் என்று கூறப்படுவதற்கும் (பின்னர் கொண்டு வரப்பட்ட திருத்தத்தின் மூலம் தமிழும் தேசிய மொழியாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டது. காரணம் இலங்கை தேசம் எப்போதுமே சிங்கள தேசமாக இருக்க வேண்டுமென்பதில் சிங்கள அரசியல் தலைவர்கள் கொண்டிருந்த விருப்பினையே எடுத்துக் காட்டுகின்றது.

அரசியலமைப்பில் மட்டுமல்ல அரசாங்கத்தின் வெளிப்படையான நிர்வாக நடவடிக்கைகள் பலவும் இலங்கை தேசம் சிங்கள தேசமே என்பதை அவ்வப்போது எடுத்துக்காட்டிய வண்ணம் தான் உள்ளது.

யுத்த காலங்களில் நீங்கள் தலைநகருக்குச் சென்றிருப்பீர்களானால் அங்கு நீங்கள் தமிழர்கள் என்ற காரணத்திற்காகவே எதிர்கொண்ட பாதுகாப்புக் கெடுபிடிகள், அசௌகரியங்களை மறந்திருக்க மாட்டீர்கள். ஏன், நீங்கள் பாவிக்கும் தேசிய அடையாள அட்டையை எடுத்துப் பாருங்கள் முன்பக்கம் முழுதும் சிங்கள மொழி மூலமே அமைக்கப்பட்டிருக்கின்றது. அரசாங்கத்தின் ஏதேனும் தேசிய நிகழ்வுகளில் நீங்கள் பங்குபற்றும் அநுபவம் கிடைத்திருந்தால், அந்த நிகழ்ச்சி முழுவதும் சிங்கள மொழியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதும், (விதிவிலக்காக சில வைபவங்களில் தமிழ்மொழி பெயர்ப்பாளர்கள் இடம் பெறுகின்றபோதும், சிங்கள மொழிக்குரிய சம அந்தஸ்து வழங்கப்படுவதில்லை. இதை நீங்கள் நன்கு அவதானிக்கலாம்.) அனைத்து ஏற்பாடுகளும், அலங்காரங்களும் சிங்கள சம்பிரதாயங்களின் படி அமைந்திருப்தையும் காணலாம். இப்பத்தி சிங்கள மொழிக்கும், பண்பாட்டிற்கும் ஏன் முக்கியத்துவம் அளிக்கின்றீர்கள் என்று கேட்டு எழுதப்படவில்லை. மாறாக, தமிழ் மொழிக்கு ஏன் அவ்வாறான சம அந்தஸ்தை இலங்கைத் தேசத்தில் வழங்க மறுக்கின்றீர்கள் என்பது பற்றியே.

அண்மையில் நடந்து முடிந்த கொமன்வெல்த் மாநாடு தான் இவ்வாறான பத்தியை எழுதத் தூண்டியது. தலைநகரில் நேரடியாகவும், தொலைக்காட்சி வாயிலாகவும் நிகழ்வுகளையும், நிகழ்வுக்கான பரப்புரைகளையும் காண நேரிட்டபொழுது, "தமிழ் மொழி எங்கே" என்று ஒருவித ஆதங்கத்துடன் கேட்கநேரிட்டது.

குறிப்பாக நிகழ்வுக்கான பரப்புரைகள் பத்திரிகைகளிலும், தொலைக்காட்சிகளிலும் விளம்பரப்படுத்தப்பட்ட பொழுது It's Your time' சிங்களத்தில் எங்களின் நேரம் என்று தெளிவாக மொழிபெயர்த்தவர்கள், தமிழில் மட்டும் இது இலங்கையின் நேரம்" என்று ஏன் மொழிபெயர்த்தார்கள் என்று சிந்திக்கையில், இது தவறுதலோ என்றால் இல்லவே இல்லை. தமிழில்கூட சுயமான உரித்தைத் தங்களுக்கென்று வருவித்து விடக்கூடாது என்று எண்ணி, அந்த சுயஉரித்தான உணர்வு (எங்களின்) இல்லாமல் இலங்கை என்றே இருக்க வேண்டும் என்றே அரசாங்கம் கருதுகின்றது. சிங்கள மக்களுக்கு எங்களின் நேரம் என்று கூறும் வாய்ப்பினை வழங்குகின்ற அரசாங்கம் தமிழ் மக்களுக்கு மட்டும் இலங்கையின் நேரம் என்று கூற வைப்பது ஏன்.? தமிழர்கள் என்றுமே இலங்கை தேசத்தின். - இலங்கை தேசம் என்பதே மேற்குறிப்பிட்டபடி சிங்கள தேசமாகவே வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதைக் கவனிக்க. —கீழ் கட்டுப்பட்டவர்கள், சுய உரித்து இல்லாதவர்கள் எனும் நுன்னிய கருத்து இருப்பது உங்களுக்குப் புரிகின்றதா?

அதுமட்டுமன்றி, அந்த நிகழ்வில் ஒழுங்குபடுத்தப்பட்ட அத்தனை வரவேற்று, மற்றும் கலாசார நிகழ்வுகள் சிங்கள பாரம்பரிய முறைப்படியும், சடங்குகளின்படியுமே அமைக்கப்பட்டிருந்தது. அந்நிகழ்வுகள் நேரடியாகவும், மறு ஒளிபரப்பு மூலமாகவும் இலங்கையின் தொலைக்காட்சிகளில் ஒளி பரப்பப்பட்டது. நீங்களே சிந்தித்துப் பாருங்கள். இவ்வாறாக தனித்து ஒரு சமூகத்தவரின் கலா சாரத்தை மட்டுமே பிரதிபலிக்கின்ற வகையில் இலங்கையின் தேசிய நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டிருப்பதை பார்க்கின்ற ஏனைய இனமக்களின், நாட்டின் பிரஜையின் மனம் எவ்வாறு இலங்கை தேசத்தை தன் தேசமாகக் கருத முடியும். மாறாக, எனது தேசத்தில் எனது மொழியைக் காணவில்லையே, எனது பாடல், ஆடல், நடனங்களைக் காணவில்லையே என்று சிந்திக்கையில், முடிவாக இது என் தேசமல்ல என்றுதான் முடிவெடுக்கத் தூண்டும்.

நிகழ்வில் பாடப்பட்ட தேசியகீதம் முற்றிலும் சிங்கள மொழிமூலம் மட்டுமே பாடப்பட்டிருக்கின்றது. தேசியகீதத்தினைப் பாடும் குழாமில் தமிழ்ப்பிள்ளைகள் இடம்பெற்றிருந்தபோதும், கீதம் முற்று முழுதாக சிங்களத்தில் மட்டுமே பாடப்பட்டிருக்கின்றது. தமிழ்பேசும் மக்கள் இந்த நாட்டின் தேசியத்தில் தங்களுக்கு உரித்துவேண்டும் என்று கோரிக்கை விடுகின்றபோது, இத்தகைய ஒதுக்குதல்கள் அவர்களையும் இலங்கை தேசத்திலிருந்து ஒதுங்கியிருக்கவே தூண்டுதலாக அமையும்.

நிகழ்வில் வரவேற்பு குறியீட்டில் "வணக்கம்" என்று மொழிபெயர்க்கப்பட்டு இருக்க, வேண்டியது "ஆயுபோவன்" என்று சிங்கள அர்த்தம் தமிழுக்கு மொழிமாற்றம் செய்யப்பட்டு இருந்தது. இந்த சம்பவம் தொடர்பில் ஊடக மாநாட்டில் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் சிறிபால டி சில்வா தான் அந்தக் குழுவில் இல்லையென்று பதிலளித்தார். தொடர்ந்து குறுக்கிட்ட அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா, அந்த ஊடகவியலாளரைப் பார்த்து "நீங்கள் வேண்டுமென்றே இந்தக் கேள்வியைக் கேட்கின்றீர்கள்" என்று கூறி பதிலே சொல்லாது விலகிக் கொண்டனர். இருப்பினும் எஞ்சியிருக்கும் கேள்வி என்னவென்றால், "வணக்கம்" என்று தமிழ்மொழியில் அழைப்பதில்கூட சிங்களமயமே இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்ற அல்லது அத்தகைய மனம் கொண்டவர்கள் எவ்வாறு தேசங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை உருவாக்கப் போகின்றார்கள். இலங்கையை ஒரே நாடாகவும், ஒரே மக்களாகவும் மாற்றப் போகின்றார்கள். இதற்கிடையில் பொதுநலவாய நாடுகளில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கும் ஒரு அமைப்பாக பொதுநலவாயத்தை கொண்டு நடத்தப்போவதாக அதன் தற்போதைய தலைமை வகிக்கும் இலங்கை அரசு தெரிவித்துள்ள நகைச்சுவை வேறு விடயம் (முதலில் இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வையுங்கள்.)

ஆக மொத்தத்தில் சர்வதேச நாடுகள் பங்குகொண்ட ஓர் சர்வதேச நிகழ்வொன்றில் இலங்கை முற்றுமுழுதாக சிங்களமயப்படுத்தப்பட்டு, சிங்கள தேசத்தின் தேசமாகவே பிரதிபலிக்கப்பட்டு இருக்கின்றது. ஆனால் இலங்கை தேசத்தில் தேசத்திற்கு அங்கீகாரம் கோருகின்ற "தமிழ்" முற்றாகப் புறக்கணிக்கப்பட்டு இருக்கின்றது. இது எந்தளவில் நியாயம். ஒரு வேளை இலங்கை தேசம் தமிழர்களுடையது அல்ல என்பதுதான் இதன் கருத்தோ?. அப்படியாயின் தேசத்தின் அடையாளம் மறுக்கப்பட்டவர்களின் அடுத்த முடிவு என்னவாக இருக்கும்?

- பார்த்தீபன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளவாலை கலைமகள் படிப்பகத் திறப்புவிழா சிறப்புமலர்

நல்ல முயற்சிக்கு நல்லாசிகள்

மாவின் கனி தூங்கும் பொழில் இளவாலைக் கிராமத்தில் 24.11.2013 ஞாயிற்றுக்கிழமை அன்று கலைமகள் படிப்பகத்தினை திறப்புவிழா செய்வதையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இந் நிலையமானது கல்வி,கலை,பண்பாட்டிற்கு பெயர் போனதொன்றாகும் மேலும் இப்படிப்பகத்தினை மிகக்குறுகிய காலத்தில் திருத்தியமைத்து உதவிய வருத்தப்படாதவாலிபர்களையும் இத்தருணத்தில் பாராட்டாமல் இருக்க முடியாது அத்துடன் இத்திறப்பு விழா சிறப்புற நடைபெறவும் மேலும் மேலோங்கி வளரவும் கீரிமலை சிறி நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரப் பெருமானின் ஆசிவேண்டி நிற்கின்றேன்.

ராஜராஜஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்கள்
ஆதீனகர்த்தாவும் பிரதம சிவாச்சாரியாரும்
நகுலேஸ்வரம் கீரிமலை

ஆசியுரை

ஒரு கிராமத்தின் கல்வி, கலை, கலாசார விழுமியங்களின் பாரம்பரியங்களைப் பேணிப் பாதுகாக்கும் நிறுவனங்களுள் சனசமூக நிலையங்கள் முதன்மையானவை. இவை இக்கிராமத்து மக்களின் முன்னேற்றத்திற்கு உதவுபவையாகும். அந்த வகையில் எமது கிராமத்தில் உள்ள நாவலடி "கலைமகள்" சனசமூக நிலையமானது வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினால் புனரமைப்புச் செய்யப்பட்டு வருவது வரவேற்கத்தக்கது.

இந் நிலையமானது ஆளுமை விருத்திக்கு உதவும் என்பதில் ஐயமில்லை. அத்துடன் இத்திறப்புவிழா சிறப்புற நடை பெறவும் இந்நிலையம் தனது பணிகளை செவ்வன ஆற்றவும் இளவாலை ஆனைவிழுந்தான் விநாயகப் பெருமானின் ஆசி வேண்டி அமைகிறேன்.

நன்றி
சிவாகம கிரியாதத்வநிதி
சிவ ஸ்ரீ.இராமபாலச்சந்திரக்குருக்கள்
(ஆனைவிழுந்தான் விக்னவிநாயகர் தேவஸ்தான
ஆதீனகுரு - இளவாலை)

கலைமகளே நீ வளர்க ...

இயற்கை வளமும் நீர்வளமும் நிறையப்பெற்ற இளவாலையூரிலே பாங்குடன் கொலுவுற்றிருக்கும் நாவலடி வைரவர் கோவிலுக்கு அழகு சேர்க்கும் வகையிலே அமையப்பெற்ற கலைமகள் படிப்பகம் கார்த்திகைத் திங்கள் 24ம் திகதியன்று வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப் படுவதையிட்டு நான் ஆனந்தமடைகிறேன். இளம்வாலைகள் இன்பமுடன் வலம்வரும் இளவாலையூரிலே இளைஞர்கள் ஒன்றிணைந்து இப்படிப்பகத்தை உருவாக்கியது நாம் அனைவரும் அறிந்ததே.

நவீன தொடர்புசாதனங்களின் கட்டுக்குள் மூழ்கித் தவித்துக் கொண்டிருக்கும் சமகால உலகில் பத்திரிகைகளின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் இப்படிப்பகம் ஆரம்பிக்கப்படுவது உண்மையிலேயே மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். படித்தவர் முதல் பாமரர் வரை நாளாந்த நிகழ்வுகளை அறிந்திட வைத்திடும் இம் முயற்சியை நாம் பெரிதும் மெச்சுகிறேன். நாளுக்குநாள் வாழ்க்கைச்செலவுகள் துரிதகதியில் அதிகரித்துவரும் வேளையில் பத்திரிகைகள் மற்றும் புத்தகங்களுக்காக பணத்தைச் செலவிடுவதற்கு மக்கள் பின்னிற்கிறார்கள். இவ்வாறாக வசதிகள் குறைந்த மக்கள் மிகுந்து வாழும் இப்பகுதியில் மக்களின் அவசியத் தேவையொன்றினை நிவர்த்தி செய்யும் வகையில் இப்படிப்பகம் அமைந்துள்ளமை வரவேற்கத்தக்கது.

இன்று பத்திரிகைகளின் படிப்பகமாக உருப்பெற்றுள்ள இந்தக் கலைமகள் படிப்பகம் இனிவரும் காலத்தில் இப்பகுதி மக்கள் அனைவரும் பயன்பெறும் சிறந்த நூலகமாக மாற்றமடைய வேண்டுமென உளமார வாழ்த்தி இடையூறுகள் ஏதுமின்றி இந்நிகழ்வு இனிதே நிறைவேற இறையருளையும் இறைஞ்சி நிற்கிறேன்.

வண.பிதா யோ.அ.யேசுதாஸ்
(அதிபர் - யா/ புனித ஹென்றியரசர் கல்லூரி. இளவாலை)

கலைமகள் படிப்பகம்

ஆரம்பம்:- 1969ம் ஆண்டில் "அரிசந்திர மயான காண்டம்" எனும் நாடகத்தை நடாத்தி இதன்மூலம் திரண்ட நிதியைக் கொண்டு கட்டப்பட்டது.

அப்போது தலைவராக **பொ.இராசதுரை** அவர்கள் தெரிவு செய்யப்பட்டார்.

இதன் பின்னாக இருந்த தலைவர்கள்

1971-1973	க.தவச்செல்வம்
1973-1975	மு.தேவதாசன்
1975-1977	சி.நாகேந்திரன்
1977-1978	மு.பிறேமதாசன்
1978-1987	சு.ஜெகதீசன்

இதன் பின்பாக 1987-1990 வரையான காலப் பகுதியில் மு.சிவராசரத்தினம், வி.சிவகுருநாதன் ஆகியோர் பொறுப்பேற்று போசகர்களாகவும் இருந்து இயங்கி வந்தனர். இதன் பின்பாக போர்ச்சூழல் காரணமாக நூலகம் சேதமடைந்தது. இக்காலப்பகுதியில் அதாவது 1990-1992 வரையில் "நவசாந் படிப்பகம்" என்ற பெயருடன் இயங்கியது. இக்காலங்களில் பத்திரிகைகள் மட்டுமன்றி புத்தகங்களும் மக்கள் உதவியுடன் வழங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டன. இப்படிப்பகத்தின் மூலமாக விளையாட்டுப் போட்டிகள் முதலானவை நடாத்தப்பட்டன. குறிப்பாக உதைபந்தாட்டப் போட்டி நடத்தப்பட்டது. நாடகங்கள் பல மேடையேற்றப்பட்டன. பின்னதாக 2009-2010 காலப்பகுதியில் இளவாலை வெண்புறா கழகத்தினால் இயங்கவைக்கப்பட்ட போதும் சில எதிர்ப்புகள் மத்தியில் அவையும் நின்று போயின.

மீண்டும் 2013.11.01 அன்று இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் இதை புனர்நிர்மாணம் செய் முன்வந்து ஊர்மக்கள் நிதித் திட்டத்துடன் இதை நிர்மாணம் செய்து மீண்டும் 23 ஆண்டுகளுக்குப் பிறகு கலைமகள் படிப்பகம் என்ற பெயருடன் திறந்து வைக்கின்றார்கள்.

விழாக்குழுத் தலைவரின் உள்ளத்திலிருந்து

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கமாகிய எமது அமைப்பு சமூகம் தொடர்பான செயற்பாட்டில் அடி வைக்க வேண்டும் என்ற விருப்புக்கு இணங்கவும், இன்றைய நிலையில் எமது கிராமத்தில் சனசமூக நிலையத்தின் தட்டுப்பாட்டு நிலைமையையும் அவற்றின் மந்த கதியான செயற்பாடுகளையும் கருத்தில் கொண்டு இளவாலை ஞானவைரவர் ஆலயம் அருகே இருக்கும் "கலைமகள் படிப்ப கம்" எனும் சனசமூக நிலையத்தை புனரமைக்க முன்வந்து இதற்கான பெருந்தொகையான நிதிதேவையை எதிர்கொள்ள பொதுமக்களின் நிதிசேகரிப்பில் ஈடுபட்டோம். எதிர்பார்த்தது போலவே நிதியுதவி, பொருளுதவி எமக்குக் கிடைத்தன. இதன் பிரகாரம் எமது வேலைத்திட்டங்களை முன் கொணர்ந்து இச் சனசமூக நிலையத்தைப் புனரமைத்து முடித்துள்ளோம். தொடர்ந்து இது இன்று முதல் இயங்கி வெகு சிறப்பான செயற்பாட்டின் மூலம் இக்கிராமத்திற்கு பயன் கொடுக்க இறையருளை வேண்டுவதோடு இனியும் இச்சனசமூக நிலையத்தின் செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்குவோம் எனக் கூறுவதில் பெருமை கொள்கிறோம்

நா.சுகந்தன்

வாழ்த்துச்செய்தி



இளவாலை கலைமகள் சனசமூக நிலையத்தினை புனரமைப்புச் செய்து மீண்டும் ஆரம்பித்து வைப்பது பெரு மகிழ்சியான ஒரு விடயமாகும். இச்சனசமூக நிலையத்தினூடாக எமது கிராமத்தின் வளர்ச்சியானது முன்னேற்ற பாதையில் செல்ல இறையாசி வேண்டுவதோடு இதில் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு வரையும் பாராட்டுகிறேன். இந்நிலையத்தின் வளர்ச்சியில் கிராம மக்கள் ஒவ்வொருவரும் ஆர்வத்தோடு ஈடுபட்டு அதன் வளர்ச்சியில் அக்கறை கொள்ள ஆசித்து நிற்கிறேன். இதில் முனைப்புடன் ஈடுபடும் இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினரையும் இந் நிர்வாகத்தினையும் வாழ்த்தி இந் நிலையத்தின் பணியானது மென்மேலும் வளர்ச்சியடைய வும், சிறப்படையவும் இறையருள் வேண்டி நிற்கின்றேன்.

செல்வி P.மாறின் பெனிற்றா
(கிராம உத்தியோகத்தர் - J/221)

தொடர்ச்சி பக்கம் 10

வாழ்த்துச் செய்தி

வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் இளவாலை என்னும் கிராமத்தில் காணப்படுகின்ற நாவலடி கலைமகள் படிப்பகமானது நீண்ட காலத்தின் பின்னர் தனது சிறந்த சேவையினை இம் மண்ணில் வாழ் மக்களுக்கு ஆற்றுவ தற்கு முன்வந்திருப்பது பாராட்டப்படக்கூடிய ஒன்றாகும். இப் படிப்பகமானது 1990ம் ஆண்டில் நாட்டின் அசாதாரண சூழ்நிலையால் ஏற்பட்ட இடப்பெயர்வின் காரணமாக இதுவரை நாளும் இயங்காதிருந்தது. தற்போது இக்கிராமத்தில் வாழ்கின்ற மக்களின் அயராதமுயற்சியினால் மீண்டும் புத்தொளி பெற்று இயங்க ஆரம்பித்திருப்பது சிறந்த ஒருசெயற்பாடாகும். இந்நிறுவனமானது எதிர்காலசந்ததியினரின் கல்விவளர்ச்சிக் கும் சிறந்தசமுதாய உருவாக்கத்திற்கும் சீரிய வழியினைக் காட்டும் ஒருநிறுவனமாக் திகழவேண்டும் என வாழ்த்தி எல்லாம் வல்லநாவலடிவைரவர் துணைபுரிய வேண்டுகிறேன்.

திரு.சோமசுந்தரம் சுகிர்தன்
தவிசாளர்.
வலிகாமம் வடக்கு பிரதேச சபை.

மாகாணசபை உறுப்பினரின் வாழ்த்துச்செய்தி

காலம் எவ்வளவு தான் நவீனத்திற்குள் மனிதர்களை இட்டுச்சென்றாலும் வாசிப்பு என்பது இன்றுவரை மாறவில்லை என்பதற்கு அப்பால் மாறவும் முடியாது. அந்தவகையில் மாணவர்கள் தொடக்கம் பெரியவர்கள் வரை வாசித்து பலன் பெறும் வகையில் இப்படிப்பகத்தை மீள உருவாக்கம் செய்ய உழைத்திட்ட அன்பு உள்ளங்களைப் பாராட்டி வாழ்துகின்றேன்.

இப்படிப்பகம் தொடர்ந்து இயங்கிடவும் சமூகத்திற்கு உதவிடும் வகையில் செயற்படவும் என்னாலான சகல உதவிகளையும் எப்பொழுதும் வழங்கிடுவேன் என உறுதியளிக்கின்றேன்.

திரு.பா.கஜதீபன்
மாகாண சபை உறுப்பினர்

வலி-வடக்கு பிரதேசசபை உறுப்பினரின் வாழ்த்துச்செய்தி

போரின் கெடுபிடியில் அகப்பட்டு சிதைவடைந்த நிலையில் இருந்த இளவாலைக் கிராமத்தின் படிப்பகமாகத் திகழ்ந்த நாவலடி கலைமகள் படிப்பகம் இந்த ஆண்டு புனரமைக்கப்பட்டு, புதுமெருகூட்டப்பட்டு புதுப்பெலிவு பெற்றுள்ளமை எல்லோர் மனதிலும் மகிழ்சி அழிக்கிறது.

இப்படிப்பகத்தினை திறப்பதற்கான முழு ஒத்துழைப்பை இவ்வூர் வருத்தப்படாத வாலிபர் சங்க இளைஞர்கள் முழுமூச்சுடன் அயராது ஈடுபட்டு செயற்பட்டதன் பலனாக இன்று இந்த படிப்பகம் திறப்புவிழா காண்கிறது இப்படிப்பகத்தின் வளர்சிப் பாதை மென்மேலும் சிறப்படைவதுடன் ஆல் போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி வளர வேண்டுமென வாழ்த்தி நிற்கின்றேன்.

திரு.வே.சண்முகநாதன்
(வலி-வடக்கு பிரதேச சபை உறுப்பினர்)

நித்தியகல்யாணியாய் பூத்துக் குலுங்கட்டும்

நாவலடி வைரவர் ஆலயத்திற்கருகில் அமைந்திருந்து அனைவருக்கும் அறிவொளி புகட்டிய கலைமகள் வாசிகசாலை, மீண்டும் புதுப்பொலிவுடன் தோற்றம் பெற்றுத் திறப்பு விழா கொண்டாடும் இவ்வேளையில் இவ் வாசிகசாலைக்கு அருகாமையில் இருந்து இவ்வாசிகசாலையில் மிகப்பயன் பெற்றவர் என்ற வகையில் அதன் மீள் எழுச்சி கண்டு மனம் உவகையடைகின்றேன் என்றும் நித்திய கல்யாணியாக பூத்துக் குலுங்க எனது வாழ்த்துக்களை வாசிகசாலை நிர்வா கத்தினருடன் பகிர்ந்து கொள்கிறேன்.

நன்றியுடையேன் இந்நிலையத்திற்கு
வைத்திய கலாநிதி தம்பிப்பிள்ளை பேரானந்தராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி வம்பானந்தா

புரிந்தால் புன்னகை செய், புதிர் என்றால் புருவம் உயர்த்து
பிதற்றல் எனத் தோன்றின் பிழையும் திருத்து...

- கமல்ஹாசன் -

சின்னப்பிள்ளையளின்ரை மனம் பாதிக்கப் படக்கூடாது எண்டு அஞ்சாம் வகுப்பிலை நடத்திற சோதினையை நிப்பாட்ட வேணும் எண்டு கல்வி உலகம் யோசிச்சுக் கொண்டிருக்குது. எங்கடை பள்ளிக்கூடங்களிலை இருக்கிற மெத்தப்படிச்ச பிறின்சிப்பல் மார் கொஞ்சப்பேர் அஞ்சு வயதுப் பிள்ளையளுக்கே சோதினை வச்சுக்கொண்டு திரியினம். முந்திப் படிப்பிக்கிறதுக்குப் பள்ளிக்கூடம் அனுப்பின காலம்போய் இப்ப பள்ளிக்கூடம் அனுப்பிறதுக்காகப் படிப்பிக்க வேண்டியிருக்குது. மூண்டு வயதிலை இருந்து பிள்ளையள் ரியூசனுக்குத் திரியுதுகள். இன்னும் கொஞ்சக் காலத்திலை ரியூசனுக்குச் சேருகிறதுக்கு மூண்டுவயதிலை சோதினை எழுதவேண்டியிருந்தாலும் ஆச்சரியம் இல்லைப்பாருங்கோ.

எல்லாரையும் சேர்க்க பள்ளிக்கூடங்களிலை இடமில்லை எண்டு சொல்லுகினம். யாழ்ப்பாணத்திலை ஆறு லட்சம், ஏழு லட்சம் எண்டு சனம் இருந்தகாலத்திலை இடமிருந்த பள்ளிக்கூடங்களிலை இப்ப என்னண்டு இடமில்லாமல் போனதெண்டு விளங்கயில்லை. கல்வித்துறையிலை இருக்கிற பெரிய ஆக்களின்ரை கண்ணுக்கு இதுகள் தெரியிறதில்லையோ. இல்லாட்டில் அவைக்கு அஞ்சு வயதிலை பிள்ளையள் இல்லைத்தானேயெண்டு கண்டும் காணாமல் திரியினமோ?

❀ ❀ ❀

கொஞ்சம் பழைய கதைதான் கனபேருக்குத் தெரியாத படியாலை சொல்லுறன் "சபையின்ரை இரண்டாவது கூட்டத்திலை நாட்டாமை பேசினதை பிரசுரிக்கயில்லை எண்டு பேப்பர்கார நண்பர் ஒருத்தரின்ரை வேலை போயிட்டுது எண்டு ஒரு கதை உலாவுது. நாட்டாமை பேசினது நீளமாய்க் கிடக்கெண்டு அவர் சார்பான பேப்பருகளே துண்டுதுண்டாய்த்தான் போட்டவை. இந்தாளுக்கு கஷ்டகாலம் நீளம் எண்டிட்டு போடாமல் கட் பண்ண நிர்வாகம் இவற்றை வேலையைக் கட் பண்ணிப்போட்டுதாம். அந்தாளைத் தொடர்பு தொடர்புகொண்டு "தங்கம் ராசா அண்ணை உங்களை வேலையாலை நிப்பாட்டினது உண்மையோ?" எண்டு கேட்டால் "எந்த கொம்பனியும் அதின்ரை பணியாளர் ஏதும் பிழை செய்தவை எண்டு நினைச்சால் நடவடிக்கை எடுக்கிறது வழமைதானே" எண்டவராம். அப்பிடி எண்டால் நீங்கள் பிழை செய்தனிங்களோ? எண்டு கேக்க "அதை எங்கடை நிர்வாகத்திட்டைக் கேட்டுத் தெரிஞ்சுகொள்ளுங்கோ எண்டு பந்தைத்திருப்பி அடிச்சிருக்கிறார்.

என்ன இருந்தாலும் பேப்பர்க்காரன் பாருங்கோ. அப்பிடித்தான் கதைப்பார். அவரை மாதிரிப் பெருந்தன்மையான ஆக்களாலைதான் எங்களை மாதிரியான வம்பு தும்புகளுக்கும் மரியாதை.

❀ ❀ ❀

யாழ்ப்பாணத்துக்கு வெள்ளைக்காரப் பிரதான மந்திரி வரேக்குள்ளை கனக்க சுவாரசியமான விசயங்கள் நடந்ததாம். தேசியப்பட்டியலும், நாடகக்குழுவின்ரை தலைவரும், எங்கடை பெரிய மந்திரியும் சேர்ந்து சந்திச்சவையல்லோ. ஐயா மாவிட்டபுரத்துக்கு சாமி கும்பிடவருவர் அங்கையே நில்லுங்கோ எண்டு சொல்லி தாங்கள் கதைக்கேக்கை தங்கடை கோஷ்டியிலை இருக்கிற மற்றவையை கிட்டவராமல் பாத்துக்கொண்டவையாம். மாவிட்டபுரத்து தேவசேனாதிபதி மக்கள் புடைசூழ போராடத்தயாராய் அங்கை நிண்டவராம். அந்த மனிசன்தான் ஆகப்பாவம் எண்டு சனம் கதைக்குது. அந்தாளைக்கிட்ட எடுத்தால் ஏதும் வில்லங்கமாய் கதைச்சுப்போடும் எண்டு முக்கூட்டு அணி நினைச் சுதோ தெரியயில்லை.

இதைச் சொல்லத்தான் இன்னுமொரு கதை ஞாபகத்துக்கு வருகுது. யாழ்ப்பாணம் வந்த வெள்ளைக்கார நாட்டு ரீ.வி க்காரர் சனத்தின்ரை துன்பங்களைப் பாத்து கண்ணீர் விட்டு அழுதிருக்கினம். காணாமல் போனவையின்ரை சொந்தக்காரரிட்டைக் கதைச்சு அவையின்ரை கஷ்டத்தைக் கேட்டு கவலைப்பட்டிருக்கினம். வெள்ளைக்காரப் பிரதான மந்திரிக்குக் குடுக்க எண்டு சனம் கொண்டுவந்த பேப்பருகளைக் குடுக்கிறதுக்கு விடாமல் காவல்காரர் தடுக்க, சனம் கொண்டுவந்த கடிதங்களை ரீ.வி க்காரர் வாங்கி பிரதான மந்திரியின்ரை உதவியாளரிட்டைக் குடுத்தவையாம். அவை எங்கை? சனம் கூப்பிடக்கூப்பிடத் தப்பியோடிப்போன நாடகக்குழுவின்ரை தலைவரும் இப்பிடி ஒரு போராட்டம் ஒழுங்கு செய்யப்பட்டதே தெரியாது எண்டு சொன்ன தேசியப் பட்டியலும் எங்கை? நாட்டிலை நடக்கிறது தெரியாமல் இவையெல்லாம் எங்கை இருக்கினம்.

எங்கடை நிர்வாகங்களிலை கொஞ்சம் ஆரோக்கியக்குறைவு இருக்குமாப் போலைதான் படுகுது எண்டு நான் சொல்லேக்கை என்னை ஒரு மாதிரிப்பாத்தனிங்கள். இப்ப அது சரியெண்டு விளங்கியிருக்கும் எண்டு நினைக்கிறன். அதைவிடுங்கோ, கதைக்குவருவம்.

வெள்ளைக்கார நாட்டு பிரதான மந்திரி வந்த நேரத்திலை இருந்து எங்கடை பெரிய அதிகாரி நாங்கள் அபிவிருத்தியள் கனக்கச் செய்தனாங்கள் எண்டு அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தவராம். ஒரு கட்டத்திலை அந்தாள் கடுப்பாகி தகரக்கொட்டிலைக்காட்டி எங்கை நீர் சொன்ன அபிவிருத்தியைக் காணயில்லை எண்டு கேட்டிருக்குது.

பிரதேச நிர்வாகம் செய்யிற அதிகாரி ஒருத்தர் எவ்வளவு நல்ல கல்வீடுகள் கிடக்குது இந்தாள் ஏன் வந்து இதை பாக்குது எண்டு கவலைப்பட்டவராம். இதை எங்கடை பேப்பர்க்காரப் பொடியள் வீடியோப்பிடிச்சிருக்கினம். சேர் சரியாய் கோபப்பட்டவர் எண்டு கதை. எங்களுக்கு அரசியல் தலைமைதான் சரியில்லை எண்டால் நிர்வாகத் தலைமையும் அதைவிடத்திறம் பாருங்கோ. ஆரிட்டைச் சொல்லியழுகிறது எண்டு தெரியவில்லை.

❀ ❀ ❀

"சிங்கள சகோதரங்களே சிறுபான்மை மனநிலையிலைதான் இருக்கினம். மற்றவையைவிட தாங்கள் சின்னனாய்ப் போனம் எண்டு நினைச்சுத்தான் எங்களுக்கு அடிக்கினம். இதுக்குக் காரணம் பக்கத்து நாட்டுக்காரர்தான். எங்களுக்காக அவை பேசப்பேச, இவ்வளவு கோடிக்கணக்கான ஆக்கள் தமிழருக்காகக் கதைக்கினம். எங்களுக்கு ஒருத்தரும் இல்லை எண்ட எண்ணம் தென்னிலங்கையிலை வருகுது. அந்தக்கோபத்திலை அவை எங்களைத் துன்புறுத்திச் சந்தோசப்படுகினம்." இதை நான் சொல்லையில்லைப் பாருங்கோ! எங்கடை பெரிய மந்திரி கண்டு பிடிச்சு பக்கத்து நாட்டு சைவப்பேப்பர்க் காரருக்குச் சொன்னவர்.

பக்கத்து நாட்டுக்காரர் கதைக் காட்டில் எங்களைத் தலையிலை தூக்கி வைச்சுக் கொண்டு திரிவம் எண்டு ஐயா வுக்கு ஆரும் சொன்னவையோ தெரிய யில்லை. தான் அப்படி சொல்லயில்லை. "சைவப்பேப்பர்" திரிச்சுப்போட்டுது எண்டு புலம்பி கொண்டிருக்கிறார் எண்டும் ஒரு கதை அடிபடுகுது. இந்தாளுக்கு இதே பிழைப்பாய் போச்சுது. எதையாவது வாந்தியெடுக்கிறது பிறகு மறுக்கிறது.

❀ ❀ ❀

காவல்காக்கிற காக்கிச்சட்டைக்காரரும், புலன் விசாரிக்கிறவையும் "பொடியள் திரும்ப வருவாங்கள்" எண்டு சுவரிலை கரியாலை தங்கடை ஆக்களைக் கொண்டே எழுதிப்போட்டு எழுதினவையைப் பிடிக்கிறம் எண்டு சொல்லி சிலபேரைத் தேடித்திரியினமாம். திருவிழாக் காலத்திலை நாடகக் குழுவுக்கு உதவி செய்தவையைப் பழிவாங்கிறதுக்குத்தான் இப்பிடிச் செய்யினம் எண்டு சனம் கதைக்குது. இதைக்கேள்விப்பட்டு எங்கடை பதினோழாம் இலக்கத்தம்பி போய் சனத்தோடை கதைச்சவராம். குடிதண்ணிப் பிரச்சனையைப் பற்றியும் கதைச்சிருக்கிறார். செய்தி அதில்லைப்பாருங்கோ.

இந்தச் செய்திக்குப் பின்னாலை தமிழரை உரசும் கட்சியின்ரை யாழ்ப்பாண மாவட்ட இளைஞரணிச் செயலாளர் கூடப் போனவர் எண்டிருந்துது. இளைஞர் அணியைக் கலைச்சுப்போட்டன் எண்டு மன்னார்த்தம்பி சொல்லுறார். பெரிய பள்ளிக்கூடத்துத் தரிசனங்காட்டிற தம்பி தன்னை யாழ்ப்பாணத்துச் செயலாளர் எண்டு சொல்லித்திரியிறார். எது சரி எண்டு ஆரைக்கேக்கிறதெண்டு தெரியயில்லை.

" முகம் நோக்கிச் சிரிப்பது நட்பல்ல, குறை நீக்க உரைப்பதே நட்பு" எண்டதை அடிக்கடி ஞாபகப்படுத்துறன் மறந்திடாதைங்கோ. vampanantha@ gmail. comக்கு தொடந்து எழுதுங்கோ. அடுத்த பேப்பரிலை சந்திப்பம்.

9ம் பக்க தொடர்ச்சி ➤

சிறப்புமலர்

அறிவுசார் விருத்தியின் கேந்திரமாய் மிளிர்க..

"கலைமகள்" படிப்பகம் நாவலடி இளவாலை எனும் இந்நிலையத்தினை மீளத் திறப்பதையிட்டும், அதன்மூலம் இக் கிராமமக்கள் தமது சமூகப்பணி மையமாகவும், தேடல் விடயங்கள், உலகியல் நடப்புக்களையும், அறிவுசார் விருத்தியினையும் அடைய வழி காட்டும் கேந்திரமாக பயன்படவும் வாழ்த்துகிறேன். இதனை முன்னெடுத்துவரும் வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினருக்கும், ஏனையவர்கட்கும் எமது பாராட்டுக்களையும், நன்றியினையும் கூறுவதுடன் மேலும் பல நற்காரியங்களை முன்னெடுத்து மக்களுக்கு வழிகாட்ட வேண்டும் என்றும் வேண்டுகின்றேன்.

திரு.இரங்கநாதன்
(அதிபர் -யா/இளவாலை மெய்கண்டான் ம.வி)

வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்

எமது கிராமத்தில் மாணவர்களிடையே வாசிப்புத் திறன் அருகி வருகின்றது. இந்த நிலைமையயை மாற்றியமைப்பதற்கு கிராமத்திற்கு ஓர் வாசிகசாலை, நூலகம் அவசியமாகின்றது. இதன்படி எமது கிராமத்தில் "கலைமகள் படிப்பகம்" எனும் வாசிகசாலை திறந்து வைக்கப்படுகின்ற மை பெருமகிழ்வை அளிக்கின்றது.மேலும் இவ்வாசிக சாலை பயனுள்ள நூல்களுடனும் சஞ்சிகைகளுடனும் செவ்வனே தனது பணியைச் செய்து எமது கிராமத்து மாணவர்கட்கும் பெருமக்களுக்கும் பயனளிக்க வாழ்த்துவதோடு இப்படிப் பகத்தை புனர்நிர்மாணம் செய்வதில் முன்னின்று செயற்பட்ட வருத்தப்படாத வாலிபர் சங்கத்தை வாழ்த்தி அவர்களின் பணி தொடர வேண்டி நிற்கின்றோம்

காந்தி கல்வி நிலைய சமூகம்
இளவாலை

நிர்வாக சபைத் தலைவரிடமிருந்து ஆசியுரை

இளவாலை மத்தியில் இயங்கி வந்த கலைமகள் படிப்பகம் 1990ம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட போர்ச்சூழல் காரணமாக இப்படிப்பகம் மிகவும் சிதைவுற்று இயங்க முடியாத நிலையில் இருந்து வந்துள்ளது.

தற்போது இவ்வூரில் இயங்கிவரும் வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினரும், இவ்வூர் மக்களும் சேர்ந்து படிப்பகத்தைப் புனருத்தாரணம் செய்து 24.11.2013 அன்று மீண்டும் புதுப்பொலிவுடன் திறந்து வைப்பதையிட்டுப் பெரும கிழ்ச்சி யடைகிறேன்.

இப்படிப்பகம் கல்வி, கலை, பண்பாடு ஆகியவற்றில் சிறந்து விளங்குவதோடு இவ்வூரில் படித்துக் கொண்டிருக்கும் மாணவச் செல்வங்களுக்கும், முதியவர்களுக்கும், வாலிபர்களுக்கும் அளப்பரிய சேவையினை ஆற்ற வேண்டும் என எல்லாம் வல்ல இளவாலை மத்தியில் எழுந்தருளி அருள் பாலித்துக்கொண்டிருக்கும் நாவலடி வைரவர் பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

நன்றி

திரு.மு.பிறேமதாசன்
(இளவாலை நாவலடி ஞானவைரவர் ஆலய பரிபாலனசபை)

நற்பணி சிறக்க வாழ்த்துக்கள்

சிறப்பாக மக்கள் நலப்பணியில் 1971 ம் ஆண்டு தொடக்கம் இளவாலையின் இடப்பெயர்வு வரை ஈடுபட்டு வந்த கலைமகள் படிப்பகம் இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் அர்பணிப்புடன் கூடிய பெருமுயற்சியினால் தற்போது மீண்டும் புது மிடுக்குடன் ஆரம்பிக்கப்பட இருப்பதையிட்டு மகிழ்ச்சியையும் பாராட்டையும் தெரிவிப்பதில் மனநிறைவு அடைவதுடன் வாலிபர் சங்கத்தின் பணி மேலும் தொடர்ந்து சாதனைகள் பல புரிய மனதார வழ்த்துகின்றேன்.

திரு.சி.குமரலிங்கம்
தலைவர்
இளவாலை வடக்கு கிராமஅபிவிருத்திச் சங்கம்

புத்துயிர்க்கும் சேவைக்கு வாழ்த்துக்கள்

இளவாலை வடக்கு கிராம சேவையளர் பிரிவில் இயங்கிவரும் கலைமகள் சனசமூக நிலையம் ஏறத்தாழ 40 வருடங்கள் இளவாலை வாழ் மண்ணின் மக்களுக்காக தனது சேவையை ஆற்றிவந்தது 1990ம் ஆண்டு இடப் பெயர்வின் போதும் இடம் பெயர்ந்த மக்களுக்கான நிவாரண, மருத்துவ வசதிகளை தன்னிகரில்லா சேவையாக செய்து வந்தது. 1992ம் ஆண்டு இடம் பெயர்ந்து 1998 ம் ஆண்டு மீளக்குடியமர்ந்த பின்னும் தனது சேவையை சலிக்காது செய்து வந்தது.

தற்போது இளவாலை வருத்தப்படா வாலிபர் சங்க இளைஞர்களின் அயராத உழைப்பில் மீளவும் இந்த சனசமூக நிலையம் புத்துயிர் பெற்று தனது மக்களுக்கான சேவையை ஆரம்பித்துள்ளது எனவே இந்த சங்கம் மென்மேலும் தனது சேவையை மக்களுக்கு முழுமையாக ஆற்றும் என்ற பெரும் நம்பிக்கையோடு வழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

திரு.பொ.இராசேந்திரம் ஓய்வு பெற்ற கிராம உத்தியோத்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்கா வரை

கப்பல் ஓட்டிய தமிழர்கள் 5

— இராஜகோபால் —

"ஆறுமாதத்துக்குத் தேவையான அரிசி மற்றும் சில சாமான்களும் இருந்தன.

"எங்களுக்கு சாப்பாட்டைப் பற்றிய பிரச்சனையே இருக்கவில்லை!

"சில சமயங்களில் ஏற்படும் முக்கிய பிரச்சனையை சமாளித்துக் கொள்ளத் தான் எமது பாய்மரக் கப்பலில் எஞ்சினைப்" பூட்டியிருந்தோம்.

"கருங்கல் பிரதேசத்தில், "சூனியப் பிரதேசம்" என்ற ஒரு இடம் கடலில் சில சமயம் ஏற்படுகிறது.

"சூரிய ஒளிக்கதிர்கள் நேரடியாகக் கடலைத் தாக்கும் போது காற்று இல்லாமல் போய் விடுகிறது!

"எஞ்ஜின் இயக்கத்தில் தான் செல்ல வேண்டியிருக்கும்.

"அப்படியான சந்தர்ப்பங்களில் பாவிப்பதற்குத் தான் எஞ்ஜினை முன்னெச்சரிக்கையாக தம்பிப்பிள்ளைத் தண்டையல் ஆலோசனையை றொபின்சன் ஏற்று முன்னெச்சரிக்கையாகப் பொருத்தியிருந்தார்!

"சூறாவளியும் இப்படியான சூனியப் பிரதேசத்தில் தான் நிகழ்கிறது.

"சமுதாயத்தில் தன்னந்தனியாகவே [illegible]பது போல இருக்கும் கப்பலுக்கு வழிகாட்டியார்?

"சில உபகரங்கள் தான்!

"கப்பல் நகர ஆரம்பித்தவுடன் எங்கிருந்து எங்கு போக வேண்டுமென்பதைத் தெரிந்து கொள்வதற்கு உலக வரைபடம் ஒன்று கப்பலுக்குள் மேசை ஒன்றின் மீது விரிக்கப்பட்டிருக்கும். கடல் மார்க்கமாகச் செல்லும் கப்பல்களுக்கு அந்த வரைபடம் தயாரிக்கப்பட்டிருக்கும்.

"அது எந்த நேரமும் அந்த மேசையிலே இருக்கும்.

"நகரங்களைப் பற்றிய விபரங்கள் அந்தச் " சாட்" டில் இருக்காது!

"உலகத் துறைமுகங்களைக் கொண்டதாக அந்த வரைபடம் இருக்கும்.

"கொம்பாஸ்" என்ற திசையறி கருவி கப்பலுக்கு வழிகாட்டும்.

"நமது கப்பல் நகர ஆரம்பித்தவுடனேயே நாம் கடந்து செல்லும் தூரத்தை அறியக் கூடியதாக ஒரு கருவி சமுத்திரத்திலும் கப்பலினுமாகப் பொருத்தி விடப் பட்டிருக்கும்.

"இக்கருவி கப்பலோடும் போது சுழன்று சுழன்று சென்ற தூரத்தைக் காட்டிக் கொண்டிருக்கும்.

"அடுத்த கருவி -

"சூரியனை அளந்து, சில கணக்கு முறைகளைக் கொண்டு சமுத்திரத்தில் நாம் எங்கே இருக்கிறோம் என்பதையறிந்து சொல்வதற்கான கமான் என்ற கருவி

"நாம் அந்தக் கருவி மூலம் எங்கு நிற்கிறோம் என்பதை உறுதி செய்து கொண்டு மேசையிலுள்ள உலக வரைபட சாட்டில் நிற்கும் இடத்தைப் புள்ளியிட்டுக் கொள்வோம்!

"சில சமயம்,

"நாம் செல்ல வேண்டிய இடத்தில் ஏதாவது மாற்றம் செய்ய வேண்டியிருந்தால், திசையை மாற்றி பயணத்தைத் தொடருவோம்...

அத்தியாயம் 07

தம்பிப்பிள்ளை தண்டையல் தலைமையில் அன்னபூரணி அம்பாள் தனது பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தாள்.

தண்டையலுக்கு உதவியாக, மற்றைய கடலோடிகள் ஒவ்வொரு வேலையையும் செய்வார்கள்!

சங்கரதாஸ் அடிக்கடி தனது சாண்டோ விளையாட்டுக்களைச் செய்து காட்டுவார்!

எவ்வளவு கடினமான பயணமென்றாலும், பொழுது போவது தெரியாமல் கப்பல் நகர்ந்து கொண்டிருந்தது!

றொபின்சன் இருக்கிறாரே -

அவர் கடலோடுவதில் ஒரு வீரர்! சாதனையாளர்! துணிச்சல் நிறைந்தவர்!

அன்னபூரணிக்கு முன்னரே பத்துத் தொன் படகில் உலகத்தை வலம் வந்து சாதனை நிகழ்த்தியவர்!

பத்துத் தொன் படகில், உலகத்தைத் தன்னந்தனியனாக வலம் வந்த றொபின்சனுக்கு முப்பது பேருடன் பயணம் செய்வது பெரிய விஷயமாக இருந்திருக்கமாட்டாதல்லவா!

கருங்கடலில் ஏழு, எட்டு மைல் வேகத்தில் கப்பல் சென்று கொண்டிருந்தது -

கப்பலின் முன் அணியத்தில் நின்று கொண்டு றொபின்சன் கடலுக்குள் குதிப்பார்!

- நீச்சலடித்து விளையாடுவார்!

(பயணம் தொடரும்...)

படிப்பது எப்படி? 5

— S.சுரேஸ்குமார் B.Sc. (Hons), M.BA(Ion)—

அந்தக் குஞ்சுகளுக்கு இரண்டு நண்பர்கள் இருந்தார்கள்.

அவை ஒவ்வொரு நாளும் பிற்பகல் 4 மணிக்கு குளத்தில் விளையாட வருகின்றன.

அவ்வாத்துகளிற்கு இரண்டு மின்கள் நண்பர்களாக இருந்தார்கள்.

ஒரு பாடத்தைக் கற்றலில் உள்ள முக்கிய படிமுறைகள் எவை?

பாடத்தினை இலகுவில் மீள ஞாபகப் படுத்துவதற்கு

ஹப்பி என்ற கல்வியியல் ஆராச்சியாளர் கூறும் முக்கிய படிகளாவன.

1. பாடத்தினை ஆய்வு செய்தல்
   (தலைப்புக்களை உப தலைப்புக் களை)
2. வினா எழுப்புதல்
3. மனதிற்கு முதல் முறை அமைதியாக வாசித்தல் (பகுதிகளை பகுத்து வாசித்தல்)
4. உரத்து வாசித்தல்
   (இதன் மூலம் கண், காது, இரண்டும் பதியச் செய்யும்)
5. மீள நோக்குதல்

எப்பொழுதும் சுறுசுறுப்பாக கற்பதற்கு என்ன செய்ய வேண்டும்?

எங்கள் செயலை உணர்ச்சி தொடர்வதாக மிகப் பெரும் ஆராச்சியாளரான வில்லியம்ஸ் ஜேம்ஸ் கூறுகின்றார். ஆகவே நீங்கள் சுறுசுறுப்பை அதிகமாகப் பெற விரும்பினால் அதாவது நீங்கள் செய்ய வேண்டிய காரியங்களை அவற்றைச் செய்யப் படிக்காத சமயங்களிலும் கூடச் செய்யுங்கள். சொல்லப் ?போனால் எப்போதும் அவற்றைக் கொஞ்சம் கூடப் பிடிக்க வில்லையோ அப்போது கட்டாயம் செய்யுங்கள் வேண்டிய சுறுசுறுப்பு வெள்ளம் போல் பெருகுவதை உணர்வீர்கள்.

(தொடரும்)

பாயும் புலி பண்டாரவன்னியன்

கலைஞர் மு.கருணாநிதி

சுந்தரலிங்கம் சிரித்துக் கொண்டான் - பிறகு இடுப்பில் சொருகியுள்ள மடலை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டு நான் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை! இதோ மடலின் உறையில் முகவரி எழுதியே இருக்கிறது! என்று அதை மட்டும் அவர்கள் இருவருக்கும் காட்டி னான்.

இருவரும் வேண்டாம்! வேண்டாம்! அவ்வளவு பெரிய ரகசியத்தை அதுவும் ராஜாங்க ரகசியத்தை நாங்கள் ஏன் தெரிந்து கொள்ள வேண்டும்? என்று மருதனும் பரதனும் முகத்தைத் திருப்பிக் கொண்டார்கள்.

சுந்தரலிங்கம் புன்னகை புரிந்தவாறு ஏ.....ஏ.....கிராக்கி பண்ணிக் கொள்ளாதீர்கள்! மடலுக்குள் என்ன எழுதியிருக்கிறார் வெள்ளையத்தேவன் என்று எனக்கே தெரியாது! பரவாயில்லை கடித முகவரியைப் படித்தால் ஒன்றும் குடி முழுகிவிடாது! படியுங்கள்! என்று அந்தக் கடித உறையை அவர்கள் முகத்தை இடிப்பது போல் தூக்கிக் காட்டினான். இருவரும் கண்களை சிறிதாக்கிக் கொண்டு அந்த மடலின் மேற்புறமுள்ள முகவரியைப் படித்தார்கள்.

பண்டாரக வன்னியன் என்னும் குல சேகரம் வைரமுத்து மன்னருக்கு என்று முகவரி எழுதப்பட்டிருந்தது.

3.வழியில் கண்ட வயோதிகர்!

முல்லைத்தீவு என்பது குறிப்பிட்ட ஒரு தோணித்துறைக்குரிய பெயராக மட்டுமன்றி அந்தப் பகுதிக்கே உரிய பெயராகும். சுந்தரலிங்கம் வந்த தோணி முல்லைத்தீவுக் கடற்கரைப் பகுதியின் ஓரத்தை நெருங்கிய போது, பரதன் அவனைப் பார்த்து, எங்கே நிறத்துவது? முல்லைத்தீவு துறையிலா? அளம்பில் துறையா? என்று கேட்டான்.

சுந்தரலிங்கம் புன்முறுவலுடன் என்ன பரதா? தெரியாதவனைப் போல் கேட்கிறாய்? வற்றாப்பளையைத் தாண்டித் தானே பண்டாரக வன்னிய மன்னர் கோட்டைக்குப் போக வேண்டும். அதனால் வற்றாப் பளைக்குச் செல்ல எது அருகில் உள்ளத் தோணித்துறையோ, அங்கே கொண்டு போய் நிறுத்து! என்றான்.

உடனே மருதன் அப்படியானால் சிலாவத்தைத் துறை தான் பக்கம்! என்றான்.

என்னமோ உங்களை நம்பி வந்திருக்கிறேன்! எங்கேயாவது நல்ல இடத்தில் கொண்டு போய் விடுங்கள்! என்றான் சுந்தரலிங்கம் சிரித்துக் கொண்டே!

கொண்டு போய் விட்டால் மட்டும் போதுமா? திரும்ப அழைத்துப் போக வேண்டாமா? என்று பரதன் கேலியாகக் கேட்டான்.

மூவரும் சுவையாகப் பேசிக் கொண்டே தோணியில் சிலாவத்தைத் துறைக் கரைப்பகுதிக்கு வந்து சேர்ந்தார்கள்.

தோணியிலிருந்து இறங்கிய சுந்தரலிங்கம், மருது, பரதன் இருவரையும் பார்த்து - நீங்கள் இங்கேயே இருங்கள்! நான் இரவு முன்னேரத்திலேயே திரும்பி வந்து விடுகிறேன் என்றான்.

தனியாகப் போகிறாயே. இருவரில் ஒருவர் துணைக்கு வருகிறோமே! என்றான் மருதன்!

என்னோடு ஒருவர் வந்து விட்டால் - இங்கே கடற்கரையில் ஒருவர் தனியாகத் தானே இருக்க வேண்டும். அதனால் நீங்கள் ஒருவருக்கு ஒருவர் துணையாக இருங்கள் என்று குறும்பாகப் பதிலளித்தான் சுந்தரலிங்கம்.

கடற்கரையில் எந்தப் பயமும் இல்லை! நீதான் வற்றாப்பளையை கடந்து அரண்மனைக்குச் செல்ல வேண்டியுள்ள வழியில் வந்த [illegible] காடு. அந்தக் காட்டில் புலி [illegible] வேறு எல்லா மிருகங்களும் உண்டு. அதனால் தான் துணையோடு போவது நல்லது! என்றான் பரதன்.

இதோ இருக்கிறது துணை ! என்று இடுப்பில் தொங்கிக் கொண்டிருந்த வாளைத் தொட்டுக் காட்டி விட்டு, சுந்தரலிங்கம் அவர்களிடம் விடை பெற்றுக் கொண்டான்.

உயர்ந்து நிற்கும் காட்டு மரங்களின் இடுக்குகளில் காலைச் சூரியனின் கதிர்கள் பட்டு அந்த வழி முழுதும் எழிற் கோலம் காட்டிக் கொண்டிருந்தன. அந்த இயற்கை அழகைக் பருகியவாறு சுந்தரலிங்கம் நடந்து கொண்டிருந்தான். காட்டுப் பகுதி ஆனாலும் கூட ஆங்காங்கு சிறுசிறு திட்டுகளாக சிற்றூர்கள் காணப்பட்டன. அந்த ஊர்களுக்குள்ளேயும் வளைந்து வளைந்து வற்றாப்பளைக்கான பாதையை அவன் கண்டு பிடித்துத் தொடர வேண்டியிருந்தது.

அந்தப் பகுதி வீடுகள் எவ்வாறு அமைக்கப்பட்டுள்ளன என்பதை அறிந்து கொள்வதிலும் சுந்தரலிங்கம் ஆர்வம் காட்டி, அதற்காகவே ஊர்ப்பகுதிகளைக் கடக்கும் போது நடையின் வேகத்தைக் குறைத்துக் கொண்டான்.

நீண்ட சதுரமான நிலப்பரப்பில் சாய்வான கூரைகளையுடைய வீடுகளும் - கூம்பக வடிவமைந்த கூரை வீடுகளும் - குவிந்த வடிவமைந்த கூரை வீடுகளும் - அந்த ஊர்களில் கலந்து கலந்து காணப்பட்டன. அந்தக் கூரைகள், தென்னோலைகளாலும், வைக்கோலாலும் வேயப்பட்டிருந்தன. சுவர்களோ பெரும்பாலும் களிமண்ணால் கட்டப்பட்டிருந்தன. சில வீடுகளுக்குத் திண்ணைகளும் இருந்தன. சற்றுப் பெரிய வீடுகளின் முன் புறத்தில் பந்தல்கள் போடப்பட்டிருந்தன. உறுதி வாய்ந்த வைரம் பாய்ந்த [illegible] மரங்கள் [illegible] வெறப்படும் காயாமரம், முதிரை மரம், வெடுக்குநாறி மரம் போன்ற மரங்களையே பந்தல் கால்களாகப் பயன்படுத்தியிருந்தார்கள்.

திண்ணைப்பகுதி, பந்தல் முகப்பு இவற்றைப் பார்க்கும் போதே அந்த மக்கள், தங்கள் வீடுகளை மிகவும் தூய்மையாக வைத்துக் கொள்ளக் கூடியவர்கள் என்பது சுந்தரலிங்கத்துக்குப் புரிந்தது.

வீடுகளுக்கு முன்னால் பத்திரி மரம், தோடை மரம், தேசிக்காய் மரம், மாதுளை மரம், மற்றும் முருங்கை, மா, பலா முதலிய மரங்களும் நெருக்கமாக வளர்ந்திருந்தன. வீட்டுக்கு முன்பு கொஞ்ச தூரத்தில் கொம்பறை எனப்படும் நெல் லுப்பட்டறைகள் இருந்தன. வீடுகளுக்கு அருகாமையில் பசுக்களும், எருமைகளும் மேய்ந்து கொண்டிருந்தன.

சுந்தரலிங்கத்தை கவர்ந்த ஒன்று, அனேகமாக எல்லா வீட்டு முகப்புப் பந்தல்களிலும் பசுமையான இலை தளைகளைக் கொண்ட தோரணங்களும், வாழைமரங்களும் கட்டப்படிருந்த காட்சி தான்!

எல்லா வீடுகளிலுமே பெரும்பாலும் இத்தகைய விழாக் கோலம் இருப்பதற்கு என்ன காரணம் என்று அறிந்து கொள்ள சுந்தரலிங்கம் ஆவல் கொண்டான். ஆனால் அவனது சந்தேகத்திற்கு விளக்க மளிக்க - அவன் கடந்து சென்ற சிற்றூர்களில் யாருமே அவன் கண்ணுக்குத் தென்படவில்லை. அதனால் அவனது ஆவல் மேலும் பெருகிற்று.

திட்டு திட்டுகளாக இருக்கிற ஊர்கள் - அங்கேயுள்ள வீடுகள் விழாக் கோலத்துடன் இருக்கின்றன. ஆனால் விழா நடத்துவோர் யாரையும் காணவில்லையே என்பது தான் அவனுக்கு எழுந்த பெரும் ஆவல்!

(வன்னியின் வரலாறு தொரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sachin Little Master

தொகுப்பு பார்த்தீபன்

முழுப்பெயர் :	சச்சின் ரமேஸ் டென்டுல்கர்
பிறந்தது :	ஏப்ரல் 24, 1973 மும்பாய், மகாராஸ்டா மாநிலம்
வயது:	40
விளையாடிய அணிகள்:	இந்தியா, ஆசியா 11, மும்பாய், மும்பாய் இந்தியன்ஸ், யோர்க்செயா
பிரபல பெயர்கள்:	ரென்டில்யா, லிட்டில் மாஸ்ரர்
விளையாடும் நிலை:	முன்வரிசைத் துடுப்பாட்ட வீரர்
துடுப்பாட்ட முறை:	வலதுகை துடுப்பாட்டம்

விருதுகள்

1994 அர்ஜுனா விருது.
1997-98 ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருது.
1997-விஸ்டனின் மிகச் சிறந்த வீரர் விருது.
1999-பத்மசிறீ விருது.
2008-பத்மவிபூஷன் விருது.
2013- பாரத ரத்னா விருது (அறிவிக்கப்பட்டுள்ளது.)

- டெண்டுல்கர் 1989ஆம் ஆண்டு தம் 16ஆவது வயதில் முதன்முறையாக இந்தியாவின் சார்பாக போட்டிகளில் விளையாடினார். 1990இல் இங்கிலாந்து அணிக்கு எதிராகத் தனது முதல் சதத்தை அடித்தார்.
- 1994 செப்டம்பர் 9 ஒரு நாள் சர்வதேச போட்டியின் முதல் சதத்தை ஆஸ்திரேலியாவுக்கு எதிராக இலங்கையில் நிறைவு செய்தார்.
- 1996 உலகக் கோப்பைப் போட்டிகளில் அதிக ஓட்டங்கள் (523) குவித்த வீரர் என்ற பெருமையைப் பெற்றார். கொல்கொத்தா ஈடன் கார்டன் அரை இறுதியில் சச்சின் வெளியேறியதும் ஒருவர் பின் ஒருவர் பரிதாபமாக ஆட்டமிழந்த நேரத்தில் இரசிகர்கள் கலவரத்தில் ஈடுபட இந்தியா இலங்கையுடன் தோல்வியடைந்ததாக அறிவிக்கப்பட்டது. சச்சின் அரையிறுதியில் 65 ஓட்டங்களை குவித்தார்.
- 1999 உலகக் கோப்பைப் போட்டிகளின் நடுவே தந்தையை இழந்த சச்சின் அவருக்கு இறுதி மரியாதை செலுத்தும் வண்ணம் சிம்பாப்வே அணியுடனான ஒரு போட்டியில் பங்கேற்காமல் இந்தியா வர வேண்டியிருந்தது. பின்னர் மீண்டும் அணியில் திரும்பிக் கென்யாவிற்கு எதிராக 141 ஓட்டங்களைக் குவித்தார். அந்தச் சதத்தைத் தனது தந்தைக்கு அர்ப்பணிப்பதாகக் கூறி கண்ணீர் மல்கினார்.
- 2003 உலகக் கோப்பைப் போட்டிகளின் 11 ஆட்டங்களிலிருந்து 673 ஓட்டங்களைக் குவித்து இந்தியா இறுதிப் போட்டிக்கு தகுதி பெறக் காரணமானார். இறுதிப் போட்டியில் இந்தியா தோல்வியடைந்தாலும் சச்சின் தொடர் நாயகன் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.
- டிசெம்பர் 10, 2005 அன்று கவாஸ்கரின் சதங்கள் (34) அடித்த சாதனையை இலங்கைக்கு எதிரான போட்டியில் முறியடித்தார்.
- 2008ஆம் ஆண்டு ஒக்டோபர் 17இல் உலகில் மேற்கு இந்தியத்தீவுகள் வீரர் லாராவின் சாதனையை முறியடித்து துடுப்பாட்டத்தில் கூடிய ஓட்டங்கள் எடுத்தவர் என்ற பெருமையைப் பெற்றார்.
- ஒரு நாள் போட்டிகளில் 49 சதங்களைப் பெற்றுள்ளார். அதிகபட்ச ஓட்டம் 200(ஆ.இ) . ஆனால் சச்சின் ஆடிய முதல் 78 ஒரு நாள் ஆட்டங்களில் சதமேதும் எடுக்கவில்லை என்பது ஓர் ஆச்சரியமான தகவல்.
- 24 முறை சச்சின் 90-99 ஓட்ட இடைவெளியில் வெளியேறிச் சதங்களைத் தவறவிட்டிருக்கின்றார்.
- ஒருநாள், தேர்வு ஆட்டங்களில் சச்சின் பிடிப்பதிலும் சதமடித்துள்ளார். ஒரு நாள் போட்டிகளில் 134 பிடிகளையும் தேர்வுப் போட்டிகளில் 106 பிடிகளையும் பிடித்துள்ளார். சச்சின் மிகச்சிறந்த பந்துபிடிப்பாளரும் ஆவார்.

சச்சின் சந்தித்த சோதனைகள்

- இருமுறை அணித்தலைவர் பொறுப்பு ஏற்றும் அவர் தலைமையின் கீழ் சொல்லத் தகுந்த வெற்றிகளை இந்திய அணி குவிக்கவில்லை.
- 2001 போர்ட் எலிசபெத்தில் தென்னாபிரிக்க அணிக்கு எதிரான இரண்டாவது போட்டியில் பந்தைச் சேதப்படுத்தியதாக ஆட்ட நடுவர் மைக் டென்னஸ் சச்சின் மேல் குற்றம் சாட்டி ஒரு டெஸ்ட் போட்டியில் ஆடத்தடை விதித்தார். ஆனால், தொலைக்காட்சியில் சச்சின் பந்தைத் துடைப்பதாக மட்டுமே தெரிய வந்தது. இனவெறியினால்தான் நடுவர் இவ்வாறு குற்றம் சாட்டுகிறார் என்றவாறு பிரச்சினை பெரிதுபடுத்தப்பட்டது. இதன் பின்னர் சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் தலையிட்டுத் தடையை நீக்கியது (இந்தியப் பாராளுமன்றம் வரை இந்தச் சிக்கல் விவாதிக்கப்பட்டது.).
- 2003இல் முழங்கை வலியினால் (Tennis elbow) அவதிப்பட்டு 10 மாதங்கள் சர்வதேச போட்டிகளில் பங்குபெற முடியாமலிருந்தார்.
- 2004இல் பாகிஸ்தானுடனான டெஸ்ட் தொடரில் 194 ஓட்டங்கள் குவித்து ஆடிக் கொண்டிருந்த போது அணித்தலைவர் ராகுல் ராவிட் ஆட்டத்தை நிறைவு செய்வதாக அறிவித்ததால் சச்சினின் இரட்டைச் சதம் சாத்தியமில்லாமல் போனது.

தாய்நாட்டுக்கு காணிக்கையாக்குகிறேன்

"பாரத ரத்னா" விருதுக்கு தேர்வு செய்யப்பட்டிருப்பது குறித்து மும்பையில் சச்சினிடம் செய்தியாளர்கள் கேட்ட பொழுது அதற்கு அவர் "மிகப்பெரிய கௌரவத்தை எனது தாய்நாடு எனக்கு அளித்துள்ளது. அதற்காக மத்திய அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எனது வளர்ச்சிக்கு வித்திட்ட ரசிகர்கள், பார்வையாளர்கள், குடும்பத்தினர், நண்பர்கள், பயிற்சியாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் இத்தருணத்தில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்த விருதை எனது தாய்க்கும் தாய்நாட்டுக்கும் காணிக்கையாக்குகிறேன்" என்றார்

சச்சினின் துடுப்பாட்ட சாதனைகள்

	போட்டி	இனிங்	ஆ.இ	ஓட்டம்	அ.ஓ	சரா	100	50	6S	பி.எ
டெஸ்ட்	200	200	33	15921	248*	53.78	51	68	69	115
ஒருநாள்	463	463	41	18426	200*	44.83	49	96	195	140
T20	1	1	0	10	10	10.00	0	0	0	1
முதற்தரப் போட்டிகள்	310	310	51	25396	248*	57.84	81	116	N/A	186

முதலாம் குறுக்குத்தெரு, மணியப்புரிவிடை [illegible] 22.11.2013 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org